# வெளியாக்கப்பட்ட மறை பொருள்

சகோ. டெல் சார்ஜென்ட் & பாஸ்டர். டான் அபாட்டியல்லோ

''.... மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்.''

மத்தேயு 16:17

முதல் பதிப்பு : அக்டோபர் 2004

இப்புத்தகத்தை மொழி பெயர்த்து
வெளியிட அனுமதித்த ஆசிரியர்களுக்கு
எமது மனமார்ந்த நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.
- பதிப்பகத்தார்.

இந்நூல் வெளிவரக் காரணமாயிருந்த
பாஸ்டர். **டேவிட் ஸ்டான்லி**
பாஸ்டர். **ஜேம்ஸ் ராஜ்**
மொழி பெயர்த்து உதவிய
பாஸ்டர். **பால்எசேக்கியேல்**
மற்றும் தேவ ஊழியர்கள் விசுவாசிகள்
அனைவருக்கும் எமது நன்றி.

மேலும் விவரங்களுக்கு :-

**The Comforter Publications**
P.o.Box. 48, Coonoor R.S. (Po)
Nilgiris. Tamilnadu - 643 102.
Phone : 0423-2207281

Printed at :

**Gayathri Offset,** 29 Nachiappa Street II, Erode - 638 001. Ph : 2250164



# பொருளடக்கம்

I **முகவுரை**
II **ஆசிரியர்களின் அனுபவ சாட்சிகள்**
III **நூல் அறிமுக உரை**

| அத்தியாயங்கள் | பக்க எண் |
|---|---|
| 01. வேதாகமத்தைக்குறித்த மறை பொருள் (விசுவாசத்தின் அஸ்திபாரமாகிய வேதம்) | 01 |
| 02. உயிரினங்களின் தோற்றத்தைப் பற்றிய மறை பொருள் (தேவனே அனைத்தின் துவக்கம்) | 11 |
| 03. சாத்தானைக் குறித்தும், தீமையைக் குறித்தும் உள்ள மறை பொருள் (தீமை வியாபித்திருப்பதின் காரணம்) | 19 |
| 04. சரீரம் மற்றும் ஆவிக்குரிய மரணங்களைப் பற்றிய மறை பொருள் (ஆதாம் மரித்தபடியால் அனைவரும் மரிக்க வேண்டும்) | 27 |
| 05. நற்கிரியைகள் குறித்த மறை பொருள் (மனிதனின் நற்கிரியைகளால் தேவனிடம் திரும்புவதில் தோல்வி) | 35 |
| 06. பலியினாலும், இரத்தத்தினாலும் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையைப் பற்றிய மறை பொருள் (ஜீவனுக்காக ஜீவன்) | 43 |
| 07. மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய மறை பொருள் (வாக்குத்தத்தத்தின் வித்து) | 57 |
| 08. உயிர்த்தெழுதலைப் பற்றிய மறை பொருள் (அனைவரும் நித்தியமாக உயிர் வாழ இயேசு மரித்து உயிர்த்தெழுந்தார்) | 69 |
| 09. மறுபிறப்பைப் பற்றிய மறை பொருள் (இயேசு ஜீவிப்பதால் நீயும் ஜீவிப்பாய்) | 77 |
| 10. ஆவிக்குரிய வளர்ச்சி பற்றிய மறை பொருள் (மறு ரூபமாக்கப்பட்ட இருதயம்) | 87 |

# முகவுரை

என் ஆவிக்குரிய விசுவாசத்தில் உத்தம குமாரனாகிய டெல் சார்ஜென்ட் அவர்களுடன் இணைந்து பணியாற்றுவதென்பது ஆசீர்வாதமான தருணமாகும். நடந்த பதினோரு வருடங்களாக அவர் பெற்ற ஆத்தும ஆதாய வரத்தினை முழுமனதுடன் செயல் படுத்தி எண்ணற்ற மக்களை கிறிஸ்துவண்டை வழி நடத்தியுள்ளார். அநேகரை சீடர்களாக உருவாக்கவும், அவர்களை வல்லமையும், விசுவாசமும் உடைய சாட்சிகளாக பயிற்றுவிக்க வேண்டும் என்பது அவரின் சுவிசேஷ ஊழியத்தில் பதிக்கப்பட்ட முத்திரையாகும்.

டெல் சார்ஜென்ட் அவர்களுக்கு கிறிஸ்துவின் மேல் இருந்த ஆழ்ந்த அன்பும், மற்றவர்கள் மேல் இருந்த கரிசனையுமே இந்நூலை எழுத உந்து சக்தியாக இருந்தது. டெல் சார்ஜென்ட் மூலம் பிரசங்கிக்கப் பட்ட சுவிஷேசச் செய்திகளின் சுருக்கமும், அவரின் செய்தியும், என்னுடைய சிந்தனைகளும் கலந்து வரையப்பட்ட வரைபடம் தான் ''இயேசுவே இரட்சிப்பின் வழி'' என்னும் இந்நூலின் கருத்தாகும்.

இந்நாட்களில் சுவிஷேசத்தைக் குறித்த நூல்களில் மக்களால் வேதத்தைக் குறித்தும், அதன் கருத்துக்களைக் குறித்தும் அறிய வேண்டிய அளவிற்கு அறிய முடியவில்லை. நமது கலாச்சாரத்தில் இல்லாத பல வேதாகம வார்த்தைகள் அவைகளில் காணப்படுவதால் அந்நூலைப் புரிந்து கொள்வது சிரமமாகவே உள்ளது.

பெரும்பான்மையான நற்செய்திக் கைப் பிரதிகள் இரண்டு காரியங்களில் ஒன்றை மட்டும் வலியுறுத்துவதாக உள்ளது.

ஒன்று, நற்செய்தியை அறிமுகப்படுத்திவிட்டு, தீர்மானிக்கும் நபரை தடுமாறச் செய்கிறது.



மற்றொன்று, நற்செய்தியைக் குறித்து ஆதரித்து மட்டுமே கூறி விட்டு புரிந்து கொள்வதற்குத் தேவையாக செய்திகளை தவிர்த்து விடுகிறது. ஆகவே சராசரி மனிதன் சுவிசேஷச் செய்தியை சரியாகப் புரிந்து கொள்ள முடிவதில்லை.

ஆகவே இந்நூலை எழுதும் நோக்கமே இயேசு கிறிஸ்துவைக் குறித்த நற்செய்தியை சுருக்கமாக, எளிமையாக, கலந்துரையாட ஏதுவாக தேவையான பல தகவல்களுடனும், புரிந்து கொள்ளத் தடுமாறும் நபர்கள் எழுப்பும் சந்தேகங்களுக்கும், கேள்விகளுக்கும் பதில் அளிக்கும் வண்ணமே எழுதப்பட்டுள்ளது.

மற்றொரு காரணம் நற்செய்தியை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று விரும்புகின்ற விசுவாசிகளுக்கு ஊன்று கோலாக இந்நூல் எழுதப்பட்டது. இந்நூலில் உள்ள கருத்துக்களை விசுவாசிகள் புரிந்து கொண்டால் மற்றவர்களுக்கு ஆதாரத்துடனும், நம்பிக்கை யுடனும், நிச்சயத்துடன் நற்செய்தியை அறிவிக்க முடியும். எக்காலத் துக்கும் உரிய உன்னதமான நற்செய்தியை தூய ஆவியானவரின் துணையுடன் இந்நூலின் உதவியினால் எவரும் மக்களிடம் பகிர்ந்து கொள்ள முடியும்.

நற்செய்தியை புரிந்து கொள்ளவும், நற்செய்தியை மற்றவர் களுக்குப் பகிர்ந்தளிக்கவும் இந்நூல் துணை புரியும்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

- டான் அபாட்டியல்லோ.

d

# ஆசிரியர்களின் அனுபவ சாட்சிகள்

## 1. சகோ. டெல் சார்ஜென்ட்

1956ஆம் ஆண்டில் பிறந்து அமெரிக்காவில் உள்ள நியு இங்கிலாந்து பகுதியில் ஒரு சிறிய பட்டணத்தில் வளர்க்கப்பட்டேன். அமெரிக்க கனவு உலகில் 36 ஆண்டுகள் தடுமாற்றமான வாழ்க்கையை வாழ்ந்து வந்தேன். என்னுடைய சுயமான, பாவம் நிறைந்த வாழ்க்கை அழிவை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. ஒரு நாள் எனது 14 வயது மகன், நாம் ஆலயத்திற்குச் செல்ல வேண்டும் என்று கூறினான். தேவனைக்குறித்து அதிகம் அறியாவிட்டாலும் அவரில் நான் நம்பிக்கை வைத்திருக்கிறபடியால் ''நல்லது'' நாம் ஆலயம் செல்லலாம் என்றேன்.

என் உடன் வேலையாளும், நண்பருமான ஒருவர் மெயின் என்ற மாநிலத்தில் உள்ள அவர் செல்லும் ''வின்டம் அசம்பளி ஆப் காட் சபை'' கூடும் நேரத்தைக் கூறினார். ஒரு ஞாயிறு அன்று நானும் எனது மகன் ஜோவும் சுமார் 300 பேர் பங்கு பெறும் அந்த ஆலய ஆராதனையில் பங்கு பெற்றோம். ஆராதனையில் பங்குபெற்ற மக்கள் மகிழ்ச்சி பொங்க, உணர்ச்சியுடன், எழுச்சியுடன் தேவனைப் புகழ்ந்து பாடுவதைக் கண்டேன். அவ்வாராதனையில் தேவ அன்பையும் பரிசுத்தத்தையும் அவருடைய பிரசன்னத்தையும் உணர முடிந்தது.

ஆராதனையை விட்டுச் சென்ற பிறகு என் சுயத்தின் வழியில் வாழச் சென்று விட்டேன். ஆனால் அந்த ஆராதனையின் அனுபவம் நான் வாழ்வது போலியான, மாயையான, வெறுமையான வாழ்க்கை என்பதை உணரச் செய்தது.



அந்த ஆராதனையில் பங்கு பெற்ற மக்களைப் போல நானும் தேவனை ஆழமாக அறிந்து கொள்ள வேண்டும் என்கிற வாஞ்சை உண்டாயிற்று. நான் தேவனை அறியாத ஓர் சந்ததியிலிருந்து வந்திருப்பதை உணர்ந்தேன். என் உறவினர்களும், நண்பர்களும் நான் கடந்த நாட்களில் கடவுளற்று வாழ்ந்ததைப் போலவே இருப்பதை உணர்ந்தேன்.

கடந்த பதினேழு ஆண்டுகளாக ஆண்டவருடன் நடப்பதிலும் அவரைப் பற்றிய சத்தியத்தை மற்றவர் களுக்கு அறிவிப்பதிலும் என் நாட்களைக் கழித்து வருகிறேன்.

என்னுடைய அனேக நண்பர்களும், உறவினர்களும் என்னைப் போலவே இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு நித்திய ஜீவனைப் பெற்று பரலோக பாக்கியத்தின் பங்காளிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

இப்புத்தகத்தை வாசிக்கும் நீங்களும் தேவனால் அனுப்பப்பட்ட இச்செய்தியை ஏற்றுக் கொண்டு உங்கள் வாழ்வு மறுரூபமாக்கப்பட்டு மகிழ்ச்சி நிறைந்ததாக மாற ஜெபிக்கிறேன். முடிவு உங்கள் கையில்;

தேவன்தாமே தங்கள் இருதயத்தையும், கண்களையும் திறந்து மறைபொருளை இப்புத்தகத்தின் மூலம் வெளிப்படுத்துவாராக.

d

## 2. பாஸ்டர். டான் அபாட்டியல்லோ

எனது அருமை தாய் ரோமன் கத்தோலிக்கக் குடும்பத்தில் வளர்க்கப்பட்டார்கள். பரலோகத்திற்குச் செல்லும் வழியாக இல்லா விட்டாலும் ஆலயத்தின் அனைத்து சடங்காச்சாரங்களையும் ஒழுங் காக கைக் கொண்டார்கள். பரலோகம் செல்ல வேண்டும் என்றால் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற உண்மையை அவர்களின் கத்தோலிக்க ஆலயம் ஒரு போதும் போதித்தது இல்லை. என் தாய் பெரியவளாக வளர்ந்த பின் அவளுடைய சகோதரி மற்றும் அவள் கணவனுடைய வல்லமை யான அனுபவ சாட்சியின் மூலம் வேதாகமத்தின் முக்கிய சத்தியங் களை அறிந்து கொண்டாள். போதகர் கார்வின் என்பவருடன் இணைந்து ஜெபித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டாள்; அதன் பின்னர் அவர்களின் குடும்ப வாழ்க்கை அற்புதமாக மாறியது.

நானும் என் தங்கையும், தாயும் கல்வாரி டேபர்நேக்கல் அசம்பளி ஆப் காட் என்ற சபை ஆராதனைகளின் பங்கு பெற ஆரம்பித்தோம். என் இளம்பிராயத்திலே சபையின் சிறுவர்களுக்கான ஞாயிறு பள்ளி வகுப்பில் போதிக்கப்பட்ட வசனங்கள்,கதைகள் மூலமாக நானும் இயேசு கிறிஸ்து என்னில் அன்பு கூர்ந்து என் பாவங் களுக்காக சிலுவையில் மரித்தார் என்பதை உணர்ந்து கொண்டேன்.

கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்தேன். ஞாயிறு பள்ளி வகுப்பில் போதிக் கப்பட்ட பல கதைகள் மூலமாக இயேசு கிறிஸ்து என்னில் அன்பு கூர்ந்து என் பாவங்களுக்காக சிலுவையில் மரித்தார் என்பதை உணர்ந்து கொண்டேன். அது போன்ற பல உருவகக்கதைகளில்



ஒன்று என் மனதை விட்டு நீங்காமல் இன்றும் பசுமையாக உள்ளது. அதனை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ஓர் பள்ளிக்கூடத்தின் வருடத்துவக்கத்தில் தன் பள்ளியை சிறந்த நன்நடத்தை நிறைந்த சூழலில் நடத்த விரும்பிய ஆசிரியர் படேர் அவர்கள் மாணவர்களுடன் இணைந்து நன்னெறி முறைச் சட்டங்களை வகுத்திருந்தார். பள்ளியும் நல்ல முறையில் நடந்து கொண்டு இருந்தது.

ஒரு நாள் யோசுவா என்ற மாணவனின் மதிய உணவு களவாடப்பட்டுவிட்டது. ஆசிரியர் அனைத்து மாணவர்களையும் கூட்டிவரச்செய்து மதிய உணவைக் களவாண்ட மாணவன் முன் வந்து குற்றத்தை ஒப்புக் கொள்ளும்வரை யாரும் வேறு எந்த காரியத்தையும் செய்யக் கூடாது என்று கட்டளையிட்டார்.

இறுதியில் பில்லி என்ற மெலிந்த, பலவீனமான ஏழை மாணவன் உணவை களவாடியதை ஒத்துக் கொண்டான். ஆசிரியர், பில்லி தன் தவறுக்கான தண்டனையை ஏற்றுக் கொள்ள முன்வரும்படி கூறினார். பில்லி கண்ணீருடனும், நடுக்கத்துடனும், பயத்துடனும் வகுப்பிற்கு முன் தண்டனையை ஏற்றுக் கொள்ள நடந்து சென்றான். ஆசிரியர் ஆண்டின் துவக்கத்தில் தீர்மானிக்கப்பட்டபடி தவறு செய்த பில்லியை பிரம்பினால் அடிக்க வேண்டும் என்று அறிவித்தார். இதைக் கேட்ட மற்ற மாணவர்கள் கதறி அழ ஆரம்பித்தனர்.

ஆசிரியர் பிரம்பை கையில் எடுத்தார். பில்லியும் தண்டனையை ஏற்க ஆயத்தமானான். ஆசிரியரின் கண்கள் குளமாக மாறிற்று. அச்சமயத்தில் யோசுவா என்ற மாணவன் இடைப்பட்டு பில்லியின் தவறை மன்னிக்க வேண்டும் என்று கூறாமல் மெலிந்த, பலவீனமான பில்லியால் தண்டனையை ஏற்க முடியாத நிலை கண்டு வருந்து கிறேன் என்றான்.

ஆனால் ஆசிரியரோ செய்த தவறுக்கு பள்ளியின் சட்டப்படி தண்டனை அடைந்தே ஆக வேண்டும் என்று கூறினார். இழப்பிற்கு

தண்டனை அளிப்பதே வழி என்று ஆசிரியர் கூறினார். அது தான் நியாயம் என்றார்.

தண்டனை உறுதியாக வழங்கப்படவேண்டும் என்றால் நான் அந்த தண்டனையை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருக்கிறேன் என்று மனதுருகி யோசுவா ஆசிரியரிடம் கூறினான். ஆனால் ஆசிரியரோ நீ எந்தத் தவறும் செய்யவில்லை. நீ நிரபராதி; ஆகவே நீ தண்டனையை பெற வேண்டிய அவசியம் இல்லை என்றார். யோசுவா, ஐயா தண்டனையை ஏற்க, அதைத் தாங்கக் கூடிய பலன் எனக்கு உண்டு ஆகவே தண்டனையை அடைய வேண்டிய பலவீன மான பில்லி காக்கப்பட பலசாலியாகிய நான் அந்தத் தண்டனையை ஏற்றுக் கொண்டு பள்ளியின் நீதியை நிலை நாட்டுகிறேன் என்றான். பில்லிக்கான தண்டனையை யோசுவா ஏற்றுக் கொண்டான்.

இது போன்ற நீதி போதனைக் கதைகளும் தேவப் பிரசன்னத் தோடு வாழ்ந்த அன்பும் கரிசனையும் உடைய மக்களின் உன்னத வாழ்வும் நான் என் வாழ்க்கையை இயேசுவிற்கு அற்பணிக்கச் செய்தது. பாவியாகிய எனக்கும் இரட்சகர் தேவை என்பதை உணர்ந் தேன். நானும் மதிய உணவைத் திருடிய மாணவனைப் போல காணப் பட்டேன். இயேசு என் பாவங்களுக்காக மரித்தார் என்பதை அறிந்து கொண்டேன். இயேசுவை நோக்கி என் பாவங்களை மன்னித்து உள்ளத்தில் வரும்படி ஜெபித்தேன். இயேசு என் ஜெபத்தைக் கேட்டார்.

என் பாவங்களைக் கழுவி அவருடைய பிள்ளையாக என்னை ஏற்றுக் கொண்டார். நான் இரண்டு பிறந்த நாட்களை உடைய பையனாக மாறினேன். 23 ஜூன் 1943 ஆம் ஆண்டு என் பெற்றோருக்கு மகனாகப் பிறந்த நான், சில ஆண்டுகள் கழித்து பரமபிதாவின் மகனாக மறுபடியும் பிறந்தேன். என் இரண்டு பிறந்த நாட்களோடு என் வாழ்க்கையைக் குறித்த தெய்வீகத் திட்டத்தையும் அறிந்தேன்.

என்னுடைய பன்னிரண்டாவது வயதில் நியூயார்க் பட்டணத் தில் ''மவுன்ட்டன் வியூ காஸ்பல் கேம்ப்'' மூலம் நடைபெற்ற கடைசி



நாளிரவு நற்செய்தி முகாமில் அனைவரும் தீமூட்டிக் கொண்டாடி னோம். அனேக வாலிபர்கள் கூடி தேவனுக்கென்று தங்களை அர்ப் பணித்த அந்த இரவில் நானும் ஓர் சிறிய குச்சியை நெருப்பில் எறிந்து ஆண்டவருக்கு என்னை அர்ப்பணிப்பதை அடையாளமாக வெளிப் படுத்தினேன். தீப்பொறிகள் பறந்த அந்த இரவில், என் வாழ்க்கையை முழுவதுமாக உமக்கு அளிக்கிறேன் என்று தேவனிடம் கூறினேன். எனது பதினாறாவது வயதில் என் ஒப்புக் கொடுத்தலை தேவன் ஏற்றுக் கொண்டார் என்று அறிந்தேன். பின்பு முழு நேர ஊழிய அழைப்பை ஏற்று கடந்த 29 ஆண்டுகளாக என் மனைவி ஏஞ்சலாவுடன் இணைந்து சபை மேய்ப்பராக பணியாற்றிவருகிறேன். எங்கள் ஊழியத்தின் பலனாக பலமக்கள் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறோம்.

### என் வாழ்க்கையின் ஜீவ வசனம்

பிலி 1 : 5 உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர், இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் அதை நிறைவுறச் செய்வார் என உறுதியாய் நம்புகிறேன்.

மக்கள் கிறிஸ்துவில் வளருவதையும் விசுவாசத்தில் உறுதிப் படுவதையும் காண்பதே எனது மகிழ்ச்சி.

உங்கள் வாழ்வில் இச்சிறியநூல் ஆசீர்வாதமாக அமைய ஜெபிக்கின்றேன்.

d

# நூல் அறிமுகவுரை

கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐஸ்வர்யத்தைப் பற்றிய நற்செய்தியை பிற இனத்தவர்க்கு அறிவிக்கவும், எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள் அனாதிக் காலமாக மறைந்திருந்த இந்த மறைபொருளின் திட்டம் இன்னதென யாவருக்கும் தெளிவுபடுத்தவும், பரிசுத்தவான்கள் எல்லாரிலும் கடையனாகிய எனக்கு இந்த கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது. (எபே: 3:8,9.)

உண்மையிலேயே அர்த்தமுள்ள, பயனுள்ள, ஆசிர்வாதமான வாழ்க்கை நம்மால் வாழ முடியுமா? அப்படியானால் அத்தகைய வாழ்க்கையை எங்கே, எப்படி கண்டறிய முடியும் என்ற தேடுதல் மக்களை மாயமான வாழ்க்கைப் பயணத்திற்குள் நடத்துகிறது. ஆசிர்வாதமான, ஆனந்தமான வாழ்வைத் தேடி மக்கள், பொன், மண், மாது, மது, புகழ் போன்றவைகளின் பின்னே செல்கின்றனர். ஆனால் அவைகள் மனிதனை வெறுமைக்கும், வெறுப்பிற்கும் வழிநடத்துகிறது.

இந்நூலில் அடிப்படையான கேள்விகளான ஜீவனின் துவக்கம், வாழ்க்கையின் நோக்கம், ஏன் தீமை வியாபித்து இருக்கிறது? மரணத்திற்குப் பின் என்ன நடக்கும்? என்பன போன்ற பல கேள்விகளுக்கான விடைகளை ஆராயப் போகிறோம். இந்நூலின் மூலம் வாழ்க்கையின் நோக்கம், வாழ்வின் பயன், நித்திய வாழ்வு போன்ற மறைபொருளான காரியங்களின் வெளிப்பாடுகளை அறிந்து கொள்ளப் போகிறோம்.

இந்நூலின் மூலம் உண்மை வாழ்வு, அர்த்தமுள்ள வாழ்வு, தேவ திட்டம் நிறைவேறும் வாழ்வு எவை என்ற மறைபொருள் வெளியாக்கப்பட வேண்டும் என்பதே எங்கள் வாஞ்சை ஆகும்.



**அத்தியாயம் – 1**

# வேதாகமத்தைக் குறித்த மறை பொருள்

''உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும்
என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது'' (சங் 119 : 105)

**அத்தியாயம் – 1**

# வேதாகமத்தைக் குறித்த மறை பொருள்

‘‘உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும்
என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது’’ (சங் 119 : 105)

‘‘உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும்
என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது’’ (சங் 119 : 105)

**வேதாகமம் தனித் தன்மை வாய்ந்தது**

உலகில் எழுதப்பட்ட எல்லா நூல்களையும் விட விற்பனையில் எக்காலத்திலும், முதன்மையான இடத்தில் இருப்பது பரிசுத்த வேதாகமம் ஆகும். 80 சதம் அமெரிக்கர்களின் இல்லங்களில் வேத புத்தகம் காணப்படுகிறது. ‘‘கிதியோன் சங்கம்’’ என்ற கிறிஸ்துவ வியாபாரிகளின் சங்கம் உணவு விடுதிகள், மருத்துவமனைகள், சிறைச் சாலைகள் போன்ற பல முக்கிய இடங்களில் மக்களின் பயன்பாட்டிற் காக வேதாகமங்களை வைத்தும், விநியோகித்தும் வருகின்றது.

வேத வசனங்களை தேசிய நினைவிடங்களிலும், நமது இல்லங் களிலும் எழுதி வைத்திருக்கிறோம். உலகின் தலைசிறந்த மனிதர்கள் தீர்மானங்கள் எடுக்கவும், தங்கள் வாழ்க்கையை நடத்தவும் வேதாக மத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதி பதவிப் பிரமாமாணம் எடுக்கும்போது, வேத வசனத்தின் வழி காட்டுதலின்படி தேசத்தை வழி நடத்துவேன் என்பதை தெரிவிக்கும் பொருட்டு வேதத்தைக் கையில் ஏந்தி பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்வார்.

காரியங்கள் இப்படி இருந்தாலும் வேத புத்தகமானது புரிந்து கொள்வதற்குக் கடினமான, மறைபொருளான காரியங்களை உள்ள டக்கியதாக இருப்பதாகவே எண்ணப்படுகிறது.

மக்கள் வேத வசனத்தின் நேர்மையான அர்த்தத்தையும், அதன் மதிப்பையும், அதில் உள்ள அற்புதமான செய்திகளையும் அறியாமற் போகிறார்கள். வாழ்க்கைக்கு மிகவும் அவசியமாக கண்டுபிடிக்கப்பட வேண்டிய பொக்கிஷமாகிய வேதம், தங்களின் புத்தக அலமாரியிலும், மேசைக்கடியிலும் புதைந்து கிடப்பதை அறியாமல் இருக்கிறார்கள்.



ஜீவ வழியானது வேத புத்தகத்தின் பக்கங்களில் எழுதப்பட் டுள்ளது. தாவீது அரசன் தேவனைப் புகழும் போது ‘‘உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக் கிறது’’ என்று கூறினார். (சங் 119 : 105)

ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு நம்பிக்கை உடையவராகவே காணப்படுகிறோம். அந்த நம்பிக்கை ஏதோ ஒன்றை அஸ்திபாரமாகக் கொண்டிருக்கிறது. உங்கள் நம்பிக்கை எதை அஸ்திபாரமாகக் கொண்டுள்ளது? உங்கள் அஸ்திபாரம் குடும்ப பாரம்பரியங்கள் மீதா அரசியலை அடிப்படையாகக் கொண்டதா, அல்லது நவீன கால ஊடகங்களின் செயல்பாட்டை அடிப்படையாகக் கொண்டதா அல்லது உங்கள் உணர்வுகளின் மீதா, நீங்கள் கற்ற கல்விக் கொள்கைகள் மீதா? அல்லது உங்கள் சுய சித்தத்தின் மீதா? உங்களின் அஸ்திபாரம் அசையாத உறுதியானதா அல்லது நிலையற்ற, அழியக் கூடியதா?

இயேசு இரண்டு மனிதர்கள் பற்றிய கதை ஒன்றைக் கூறினார்.

ஒருவன் தன் வீட்டை மணலின் மேல் கட்டினான். காற்றடித்து, மழை பெய்து வெள்ளம் பெருக்கெடுத்து அந்த வீட்டின் மேல் மோதியபோது அந்த வீடு அழிந்து போயிற்று. மற்றொருவன் தன் வீட்டை கற்பாறையின் மேல் கட்டினான், காற்றடித்து, மழை பெய்து வெள்ளம் அந்த வீட்டின் மேல் மோதியும், அந்த வீடு நிலைத்து நின்றது. இந்த மாற்றத்தின் காரணம் அஸ்திபாரமே. (மத். 7:24-27).

இந்நூலில் தாங்கள் தொடர்ந்து கற்றுக் கொள்ளப்போகும் அனைத்து காரியங்களுக்கும் அஸ்திபாரம் வேதாகமம் ஆகும். நாம் தொடர்ந்து ஆராயப்போகும் வாழ்க்கையின் பல முக்கியமான அடிப்படை கேள்விகளுக்கு வேதாகமம் தான் தெளிவான பதிலை நமக்கு அளிக்கப் போகிறது. மறைபொருளாகத் தோன்றும் இந்த வேதாகமம் உறுதியான அஸ்திபாரமாக நமக்கு இருக்குமா? ஆம். உலகில் தனித்தன்மை வாய்ந்த அற்புதமான, மற்ற எல்லா நூல் களிலும் சிறந்த, வேதபுத்தகமாக நாம் நம்புவதற்கு உரிய அஸ்திபாரம் வேதாகமமே என்பதற்கான பல காரணங்களை நாம் தொடர்ந்து காணலாம்.

**வேதாகமம் அமைப்பில் தனித்தன்மை வாய்ந்தது**

வேதாகமம் ஒரே நூல் அல்ல. பல நூல்களைக் கொண்ட நூல் நிலையம் போன்றது. 66 புத்தகங்களைக் கொண்ட வேத புத்தகத்தின் முதல் 39 புத்தகங்களை பழைய ஏற்பாடு எனவும், பின்னர் உள்ள 27 புத்தகங்களை புதிய ஏற்பாடு எனவும் பெயரிடப்பட்டு இரு பெரும் பிரிவுகளாக இருக்கிறது. வேதாகமம், ''தேவனுடைய வார்த்தை'' ''நியாயப்பிரமாணம்'', ''வார்த்தை'', ''வேத வசனம்'' என்பன போன்ற பல்வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.

**வேதாகமம் தொடர்ச்சியால் தனித்தன்மை வாய்ந்தது**

வேதாகமம் சுமார் 1500 ஆண்டுகளின் சம்பவங்களை உள்ள டக்கி, அவ்வப்போது எழுதப்பட்டது. நாற்பது வித்தியாசமான வாழ்க்கை முறையைக் கொண்ட வித்தியாசமான நபர்களால் எழுதப் பட்டது. அளவிடப்படமுடியாத அரிய வேதாகமத்தை எழுதுவதில் அடிமைகள், அரசர்கள், முற்பிதாக்கள், அரசியல் தலைவர்கள், ஆசாரியர்கள், ஆடுமேய்ப்பவர்கள், ஆயக்காரர்கள், மீன்பிடிப்பவர்கள், வைத்தியர்கள், வியாபாரிகள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள் போன்ற பலதரப்பட்ட மக்களும் பங்கு பெற்றிருக்கின்றனர்.

ஆசியா, ஆப்ரிக்கா, ஐரோப்பா ஆகிய மூன்று கண்டங்களி லிருந்தும் வெவ்வேறு நபர்களால் வெவ்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்டது. எபிரெய, அராமிய, கிரேக்க மொழிகளில் எழுதப் பட்டது. குப்பை மேடுகளிலிருந்தும், சிறைச்சாலைகளிலிருந்தும், சிங்கார மாளிகைகளிலிருந்தும், பாலைவனத்திலிருந்தும், நகரத்திலி ருந்தும், கிராமத்திலிருந்தும் எழுதப்பட்டது. யுத்த காலங்களிலும், பஞ்ச காலங்களிலும், சமாதானமான சமயங்களிலும், துன்ப வேளை களிலும், வெற்றிக் களிப்பின் நேரத்திலும், தோல்வியில் துவண்ட சமயங்களிலும், கண்ணீரிலும், களிப்பிலும் எழுதப்பட்டது.

இப்படிப்பட்ட வித்தியாசமான மக்களால், வித்தியாசமான காலங்களில், வித்தியாசமான இடங்களில், வித்தியாசமான மொழி களில் எழுதப்பட்ட நூல்களின் தொகுப்பான வேதாகமம் அதன்



இணைப்பிலும், தொடர்ச்சியிலும், தத்துவங்களின் ஐக்கியத்திலும், சத்தியத்தை வெளிப்படுத்துவதிலும், யாதொரு சிறிய வேற்றுமை யையோ அல்லது தொடர்ச்சியின்மையையோ காண முடியவில்லை. அனைத்து ஆசிரியர்களும் தங்களின் செய்திகளில் ஒருமைப்பாட்டை கடைப்பிடித்திருப்பதை காணும் போது ஒன்றான மெய்த் தேவனே அவர்கள் எழுதுவதற்கான உள்ளுணர்வுகளையும், செய்திகளையும் அளித்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

**வேதாகமம் திட்டவட்டமாய் அறிவிப்பதில் தனித்தன்மை வாய்ந்தது**

வேதாகமம் பொய்யானது என்று ஒரு போதும் நிரூபிக்கப்பட வில்லை. வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள மனித குழுக்கள், சரித்திரச் சம்பவங்கள், தனி நபர் பற்றிய சம்பவங்கள், இடங்கள், கட்டுக் கதைகள் போல காணப்படலாம். ஆனால் அகழ்வாராய்ச்சி யாளர்கள் தங்கள் ஆராய்ச்சியின் மூலம் வேதம் கூறுவது யாவும் உண்மை என்று நிரூபித்து வருகின்றனர். உதாரணமாக, இயேசு கிறிஸ்துவை நியாயம் தீர்த்த பொந்தியு பிலாத்து என்பவரைப் பற்றி வேதத்தில் ஒரே ஒரு இடத்தில் மட்டும் குறிப்பிட்டுள்ளபடியாலும், அவரைப் பற்றி விவரமாய் குறிப்புக்கள் இல்லாதபடியாலும், பொந்தியு பிலாத்து என்று ஒருவர் இருந்தாரா? என்றே பலர் கேள்வி எழுப்பினர். எனவே வேதத்திற்கு எதிரான கருத்துடைய மக்கள் கிறிஸ்துவின் சரித்திரமே பொய் என்று கூறினர். ஆனால் சமீப காலத்தில் அகழ்வாராய்ச்சியாளர்கள் இஸ்ரவேலின் கடற்கரை நகரமாகிய செசரியாவில் முதல் நூற்றாண்டு என்று குறிப்பிட்டிருந்த கல்வெட்டில் பிலாத்துவைக் குறித்தும், பல்வேறு வேதாகமச் சம்பவங்களைக் குறித்தும் குறிப்புக்களை கண்டெடுத்து உள்ளனர். ஆகவே, வேதம் திட்டவட்டமாக அறிவிப்பதில் தனித்தன்மை வாய்ந்தது.

**வேதாகமம் பாதுகாக்கப்பட்டதில் தனித்தன்மை வாய்ந்தது**

வேதாகமம் 2000 ஆண்டுகளாக பயன் பாட்டில் உள்ளது. ரோம அரசர் காலம் முதல் தற்போதுள்ள கம்யூனிஸ்டுகள் காலம் வரை

பல்வேறு தாக்குதல்களையும் தாங்கி வெற்றி நடைபோடுகிறது. அநேகர் வேதத்தை தீயிட்டு கொளுத்தி அழிக்க முற்பட் டனர். ஆனால் ஒருவராலும் முடியவில்லை. வேதாகமம் இன்றும் நிலைத்திருக்கிறது. வால்டயர் என்ற நாத்திகத் தலைவன் வேதாகமும், கிறிஸ்துவமும் அழிந்து போகும் என்று ஆர்ப்பரித்தான். ஆனால் ஐம்பதாண்டுகள் கழித்து வால்டயர் வாழ்ந்த அதே வீட்டை ஜெனிவா வேதாகமச் சங்கம் விலைக்கு வாங்கி அவனுடைய அச்சுக் கூடத்திலேயே வேதாகமத்தை அச்சடித்தனர். வேதாகமம் மனித தாக்குதலில் இருந்து காக்கப்பட்டது மட்டுமல்ல. இயற்கை அழிவிலிருந்தும் பாது காக்கப்பட்டது. அழியக் கூடிய தோல் சுருள்களில் கையினால் மை கொண்டு எழுதப்பட்ட வேதம், அச்சினால் வெளியிடப்படும் வரை பல நூற்றாண்டுகள் அழியாமல் காக்கப்பட்டது. ஆம்! வேதம் பாதுகாக்கப்பட்டதில் அற்புதமானது!

**வேதாகமம் தீர்க்கதரிசன செய்திகளில் தனித்தன்மை வாய்ந்தது**

தீர்க்கதரிசனம் என்பது தேவனிடமிருந்து மனிதனுக்கு மனிதன் மூலம் அளிக்கப்பட்ட செய்தியாகும். அது, நிகழப் போகும் எதிர்கால சம்பவங்களை உள்ளடக்கியது. வேதாகமமானது எதிர்கால நிகழ்வுகளை மிகத்துல்லியமாகவும், ஊசிமுனை நிரூபணங்களாகவும், தெளிவான குறிப்புக்களோடும் கூறுகிறது. இயேசு கிறிஸ்து பிறப்பிற்கு 700 ஆண்டுகளுக்கு முன் பழைய ஏற்பாட்டில் அவரைக் குறித்து கூறப்பட்ட 300 தீர்க்க தரிசனங்கள் துல்லியமாக நிறைவேறியுள்ளது. ஏதோ விளையாட்டாக அல்ல. ஆனால் உறுதியாக இயேசுவின் பிறப்பு, காலம், இடம், அவருடைய பிறப்பின் தனித்தன்மை யாவும் வேதத்தில் முன்னறிவிக்கப்பட்டு நிறைவேறியது. இயேசு கிறிஸ்துவின் குடும்பம், வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல் யாவும் முன்னறிவிக்கப்பட்டு நிறைவேறியது. சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சங்கீதப் புத்தகம் 22ம் அதிகாரத்தில் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. இயேசுவை குறித்து கூறப்பட்ட தீர்க்க தரிசனங்களால் வேதாகமம் தனித்தன்மை வாய்ந்தது என்பது மட்டுமல்ல, தேவகரமே தேவவசனமாகிய வேத புத்தகத்தை ஆளுகை செய்து அருளியது என்பதும் தெளிவாகிறது.



**வேதாகமம் எழுதப்பட்டதின் நோக்கம் தனித்தன்மை வாய்ந்தது**

வேதாகமம் தற்செயலாய் எழுதப்பட்ட கட்டுக்கதை அல்ல. ஒவ்வொரு பகுதியும் இயேசு கிறிஸ்துவை மையப் பொருளாக வைத்தே எழுதப்பட்டு உள்ளது. வேதாகமம் தேவனால் மனிதனுக்கு எழுதப்பட்ட அன்பின் கடிதம், அவரோடு மனிதன் உறவு கொள்வதற்கான இயேசுவின் பாதையைக் காட்டுவதே அதன் நோக்கம். இழந்துவிட்ட பரலோகத்தை மீண்டும் இயேசுவின் மூலம் அடைவது பற்றிய சத்தியம்.

அப்போஸ்தலனாகிய யோவான் ''இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினால் நித்திய ஜீவனை அடையும் படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது'' (யோவா. 20:31) என்று கூறுகிறார். தேவன் தம்முடைய சத்தியத்தை விசுவாசிக்கும்படி வேதத்தை எழுதி கொடுத்துள்ளார். அப்போஸ்தலனாகிய பவுல் ''தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதி இருக்கிறவைகள் எல்லாம் நமக்கு போதனையாக எழுதி இருக்கிறது என்றார்'' (ரோமர் 15:4) வேத வாக்கியங்கள் எல்லாம் தேவனால் தேவனுடைய மனுஷன் தேறினவனாக எந்த நற்கிரியையுஞ் செய்ய தகுதி உள்ளவனாக மாற்றுவதற்கு அருளப்பட்டது. (2 தீமோ 3:16) என்றும் கூறுகிறார்.

**வேதாகமம் வல்லமையினால் தனித்தன்மை வாய்ந்தது**

வேதாகமம் வல்லமையுள்ள புத்தகமானதால் இன்றும் அழியாமல் இருக்கிறது. அதனுடைய காகிதம், மை, தோல்சுருள் இவைகள் அல்ல, அதனுடைய செய்தி ஜீவனுள்ளது. தேவனுடைய வார்த்தையானது ஜீவனும், வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும், ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயுமிருக்கிறது. (எபி 4:12) வேத வசனத்தால்

வாழ்க்கை மாற்றப்பட்ட பல சாட்சிகள் உண்டு. போதை பொருள் கட்கும், மதுபானத்திற்கும் அடிமையாய் இருந்த பலர் வேத வசனத் தால் விடுவிக்கப்பட்டுள்ளனர். திருடரும், கொலைகாரரும் மாற்றப் பட்டுள்ளனர். கல்லான இதயமுடைய மக்கள் கசப்பு, வெறுப்பு, பகைமை போன்ற உணர்வுகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். தேவவசனத்தின் வரவால் நோய் நொடிகளும், வறுமையும் மாறி வாழ்க்கை செழிப்பாக மாறியுள்ளது. தேவனுடைய வார்த்தையானது நம்பிக்கை அற்றோருக்கு நம்பிக்கையையும், தள்ளாடுகிறவர்களுக்குப் பெலனையும், குருடர்களுக்குப் பார்வையையும், பேதைகளுக்கு ஞானத்தையும், கலங்கிய இதயத்திற்கு சமாதானத்தையும், அனாதை களுக்கு ஆதரவையும், எல்லாவற்றிற்கும் மேலாக வேதம் நம்மை நித்திய வாழ்விற்கு நேராக நடத்துகின்றது. தேவனுடைய தெய்வீக சுபாவத்தில் நாம் பங்கு பெறக்கூடிய வல்லமையை தேவ வசனம் நமக்கு அளிக்கிறது என்று பேதுரு கூறுகிறார் (2 பேதுரு 1:3-4).

**விசுவாசத் தேவைக்கு தனித்தன்மை வாய்ந்தது**

இவ்வத்தியாயத்தின் இறுதிச் செய்தி ''விசுவாசம்''. விசுவாசம் என்பது ஏதோ ஒன்றின் பேரில் ஒருவர் பேரில் அல்லது கொண்டி ருக்கும் நம்பிக்கையே ஆகும். நமது விசுவாசம் பல நிலைகளை யுடையது. கடந்த முறை நீங்கள் நாற்காலியில் அமர்ந்தபோது நாற்காலி உங்களைத் தாங்கிக் கொள்ளும் என்று விசுவாசித்தீர்கள். உங்கள் வாகனத்தை ஓட்டும் போது அதனுடைய இயந்திரத்தின் தன்மைகளை நம்புகிறீர்கள். ஆனால், உண்மையான விசுவாசம் மிகவும் கடினமான ஒன்று. ஏன், எப்படி என்ற பல கேள்விகளுக்குப் பதில் காண முடியாது. ஆனால் அறியப்பட முடியாத பலவற்றை நம் அனுதின வாழ்வில் வெற்றியாக செயல்படுத்த முடிகிறது.

உங்கள் நாற்காலியை, உங்கள் கார் இயந்திரத்தை நம்புவதைக் காட்டிலும், வேதத்தின் ஒவ்வொரு வரியையும் நம்புவதற்கு, அது பாத்திரமானது. வானமும், பூமியும் ஒழிந்து போகலாம். என் வார்த்தைகளோ ஒருபோதும் ஒழிந்து போவதில்லை. (மத் 24:35) என்றார். இது ஏதோ குருட்டுத்தனமான விசுவாசம் அல்ல. வேத



மானது அதனுடைய நிருபிக்கப்பட்ட பல அற்புதமான தன்மைகளாக அமைப்பில், தொடர்ச்சியில், நிறைவேறுதலில் பாதுகாக்கப்பட்டதில், நோக்கத்தில், செயல்பாடுகளில் தெய்வீக தன்மையால் சிறந்து விளங்குகிறது. எது எப்படியாயினும் மனிதன் தேவ வசனத்தை முற்றிலு மாக விசுவாசிக்க தன்னைப் பயிற்றுவித்துக் கொள்ள வேண்டும்.

இரண்டு மலைகளுக்கு நடுவில் ஒரு மிகப் பெரிய காட்டாறு; இரண்டு மலைகளையும் ஒரு கயிற்றினால் இணைத்து கட்டினான் ஒரு மனிதன். கட்டிய கயிற்றின் மேல் இந்த மலையிலிருந்து மற்ற மலைக்கு கயிற்றின் மேல் கையில் ஓர் சக்கர நாற்காலியுடன் நடந்து சென்றான். கூடி நின்ற மக்கள் கரகோஷம் செய்து அவனைப் பாராட்டினார்கள். அந்த மனிதன் கூடி நின்ற மக்களைப் பார்த்து மீண்டும் நான் கயிற்றில் நடந்து அக்கரையிலுள்ள மலைக்குச் செல்ல முடியும் என்று நம்புகிறீர்களா? என்றான். கூட்டம் ஆம் என்று ஆர்ப்பரித்தது. அப்படியானால் என் தோளின் மேல் அமர்ந்து என்னுடன் வர யாராவது தயாரா? என்றான். எங்கும் அமைதி. யாரும் வரவில்லை.

ஆம்! விசுவாசிக்கிறேன் என்பது எளிது. ஆனால் விசுவாசத்தை உடையவர்களாக இருப்பது என்பது வித்தியாசமானது. விசுவாசத்தின் ஜீவநாடி சத்தியத்தைப் புரிந்து கொள்ளுதல் ஆகும். வேதம் ஒரு பாட நூல் அல்ல. அது தேவனால் திறக்கப்பட்ட அவருடைய இதயமாகும். தேவ வசனத்தை கேட்பதின் மூலமே விசுவாசம் வரும். ''விசுவாசம் கேள்வியினால் வரும்... தேவ வசனத்தை கேட்பதினால் வரும். (ரோமர் 10:17).

என்னோடு இணைந்து இச்சிறிய ஜெபத்தை செய்து விட்டு தொடர்ந்து படியுங்கள். ''அன்புள்ள ஆண்டவரே உம்முடைய வார்த்தையை ஏற்றுக் கொள்ள என் சிந்தையை, இருதயத்தை திறந்தருளும். ஆமென்''.

d

**அத்தியாயம் – 2**

# உயிரினங்களின் தோற்றத்தைப் பற்றிய மறை பொருள்

''ஆதியிலே தேவன் ........................'' (ஆதி 1 : 1)

''ஆதியிலே தேவன் ........................'' (ஆதி 1 : 1)

**தேவன் வியாபித்து இருக்கிறாரா?**

தேவன் ஒருவர் இருக்கிறாரா? என்று நீங்கள் எப்போதாகிலும் வியந்தது உண்டா?

''கேல்அப்'' என்ற குழுவினர், பெரும்பான்மையான மக்கள் தேவன் ஒருவர் உண்டு என்று நம்புகின்றனர். ஆனால் அந்த நம்பிக்கை அவர்களின் வாழ்க்கையில் எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்துவ தில்லை.

தேவன் வியாபித்திருக்கிறார் என்பது உண்மை. அவர் நித்திய மானவர்; ஆதியும் அந்தமும் இல்லாதவர். ஒரு புதையலைத் தேடுகிற மனிதனின் நம்பிக்கையைப் போல வேதம், தேவன் ஒருவர் இருக்கிறார் என்று கேள்விக்குறி இன்றி அங்கீகரித்துள்ளது. ஆனால் அவரின் துவக்கத்தைக் குறித்து எவ்வித தகவலும் வேதத்தில் கூறப்பட வில்லை. வேதபுத்தகமே ''ஆதியிலே தேவன்'' என்றே துவங்குகிறது. ''பர்வதங்கள் தோன்றும் முன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்கும் முன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனா யிருக்கிறீர்'' என்று சங்கீதம் 90:2ல் வாசிக்கிறோம். எபிரெயர் 11:6ல் ''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மை தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறார் என்றும் விசுவாசிக்க வேண்டும்'' என்று கூறப்பட்டுள்ளது.

ஆகையால், தம்முடைய மறைபொருள் வெளியாகும்படி தேவன் ஒருவர் இருக்கிறார் என்ற விசுவாசத்தோடு அல்லது முடிவோடு நம் பயணத்தைத் தொடங்குவோம். நாம் தேடுகிற மறைபொருள் பொய்யல்ல. மாறாக அது விலையேறப் பெற்றதும் நிலைத்து நிற்கக் கூடியதுமான தேவனோடு உள்ள உறவு.



**தேவன் அண்ட சராசரங்களையும் உண்டாக்கினார்**

உலகப் படைப்பின் துவக்கத்தை அறிய பலரும் ஆராய்ச்சி செய்து போராடி வருகின்றனர். கிரகங்கள், நட்சத்திரங்கள், மிருகங்கள், செடிகள், மனிதர்கள் எங்கிருந்து வந்தன? உலகம் காஸ்மிக் கதிர் களின் தாக்கத்தால் உண்டானதா? உலகம் தானாகவே தோன்றினதா? அல்லது அதை யாரேனும் வடிவமைத்தார்களா?

பொதுவாக மனித சமுதாயம், உலகமானது காஸ்மிக் கதிர்களால் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியால், அல்லது சுழற்சியால் உண்டானது என்று கருதுகின்றனர். உலகமும், இயற்கையும் தற்செயலாகவே தோன்றினது என்று பலர் போதிக்கின்றனர்.

இக்கூற்றை சோதித்தறிய, அப்படிப் போதிக்கின்றவர்களிடம் சில கேள்விகளைக் கேட்டு தெளிவடைவது நல்லது.

மிகப் பெரிய இந்த அண்டசராசரம் எதிலிருந்து வந்தது? எந்தப் பொருளில் இருந்து உலகம் வெடித்துக் கிளம்பியது? ஒரு வெடி விபத்தால் மிக நேர்த்தியாக இயங்கும் இவ்வுலகை உண்டாக்க முடியுமா? புவியீர்ப்பு விசை எவ்விதம் உண்டாயிற்று? பயனற்ற கற்பாறைகளிலிருந்து ஜீவஜந்துக்கள் உருவாக முடியுமா?

இதைப் போன்ற பல கேள்விகளுக்குப் ''பரிணாம வளர்ச்சி'' கொள்கைக்காரர்களால் பதில் அளிக்க முடியாது. ஓர் பரிசோதனையின் மூலமாக இதை நாம் புரிந்து கொள்ளலாம். ஒரு படம் வரையப்பட் டுள்ள தாளை கிழித்து தரையில் போட்டு விடுங்கள். அது தானாகவே ஒன்று சேர்ந்து விடுமா? அல்லது ஒரு கைக்கடிகாரத்தை தனித்தனி பாகங்களாக கழற்றி வைத்து விடுங்கள். அவை தானாகவே ஒன்று சேர்ந்து விடுமா? முடியாது. அப்படி இருக்கும் போது, இவ்வளவு பெரிய உலகம் தானாக, ஒழுங்காக வடிவம் பெறவோ, இயங்கவோ முடியுமா?

ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழக உயிரியல் பேராசிரியர் டாக்டர். ரிச்சர்ட் டாக்கின்ஸ் என்பவர் மிகத் துல்லியமாக நிகழக் கூடாதது

ஒன்று உண்டென்றால் உலகம் தானாக உண்டானது என்பதே ஆகும். மேலும் படைப்பிற்குப் பின்னால் படைத்தவர் ஒருவர் இருக்க வேண்டும் என்றும் கூறுகின்றார். எந்தக் கட்டிடமும் வடிவமைப்பாளர் ஒருவர் இல்லாமல் கட்ட முடியாது. எந்த படைப்பும் படைப்பாளி ஒருவர் இல்லாமல் உண்டாகாது. ஆகவே, பரிணாமக் கொள்கை என்பது ஓர் அழகிய கட்டுக்கதை.

கட்டுக் கதைகளில் மந்திரக்கோலும், தவளையும் இணைந்தால் இளவரசர் தோன்றுவார். பரிணாம கொள்கையின் கதை என்ன வென்றால் தவளை காலப் போக்கில் இளவரசனாக மாறி விடுகிறது என்கிறார். டாக்டர் கென்ட் ஏவிண்ட்.

பரிணாம கொள்கை மனுவர்க்கத்திற்குப் பயன் அற்ற, அந்தரத்தில் ஆதாரமற்று ஆடிக் கொண்டிருக்கும் ஊஞ்சல் போன்றது என்று பேராசிரியர் லூயிஸ் போனோ கூறுகிறார்.

சர் ஆர்தர் கெயித், டார்வின் எழுதிய உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி என்ற நூலின் நூறாவது பதிப்பிற்கு எழுதிய முகவுரையில் ‘‘பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு என்பது நிரூபிக்கப்படாத, நிரூபிக்க முடியாத ஒன்று என்றும், இக்கொள்கையை நாம் ஏற்றுக் கொள்வதற்குக் காரணம். சிருஷ்டிப்பின் சிறப்பை நம்மால் எண்ணிப் பார்க்க முடியாத காரணத்தால் மட்டுமே என்று கூறுகிறார்.

சிருஷ்டிப்பின் தேவனை ஏன் நினைத்துப் பார்க்க முடிய வில்லை? சிருஷ்டிக் கர்த்தர் ஒருவர் உண்டானால், அவரால் மனிதன் சிருஷ்டிக்கப்பட்டிருந்தால், அவர் சிருஷ்டித்த நோக்கத்தை மனிதன் நிறைவேற்ற வேண்டும். அவனை உண்டாக்கினவர் அந்த நோக் கத்தை அவன் நிறைவேற்ற வேண்டும் என எதிர்பார்க்கிறார். இப் பொறுப்பை ஏற்க மறுக்கும் மனிதர்கள்தான் பரிணாம கொள்கையை ஏற்பவர்கள். ஆனால் தேவன் மனிதனை உண்டாக்கினார் என்பதே சத்தியம். வேதம் மிகத் தெளிவாக ‘‘ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார் (ஆதி 1:1) என்று கூறுகிறது. தேவன் ஓர்



உயரிய உன்னத நோக்கத்துடனேயே திட்டமிட்டு அண்டசராசரங் களையும் உயிரினங்களையும், மனிதனையும் உலகின் நியமனங் களையும் உண்டாக்கினார் என்பது இதனால் விளங்கும்.

**தேவன் மனிதனைப் படைத்தார்**

தேவன் தமது படைப்புக்கள் அனைத்தையும் படைத்து முடித்த பின்னர், அவைகளை நல்லது என்று கண்டார். ஆனால் மனிதனை உண்டாக்கின பின்பு அது மிகவும் நன்றாயிருந்தது என்று கண்டார். தேவனுடைய சிருஷ்டிப்பில் மனிதன் மகுடமாக, சிறப்பானவனாக, தேவனுடைய ரூபத்தின் வெளிப்பாடாக இருந்தான். தேவனே மனி தனை உருவாக்கினார். முதல் மனிதனாகிய ஆதாமை தமது சாயலா கவே படைத்தார். மனிதனுக்குள் தேவன் ஊதி தமது ஜீவசுவாசத்தை அருளும் முன் ஒரு மண் பொம்மையாகவே இருந்தான். தேவன் தமது ஜீவசுவாசத்தை அவன் நாசியில் ஊதிய பின் (ஆதி 2 :7) அழிவில் லாத ஆத்துமாவைப் பெற்றுக் கொண்டான். கையில்லாத கையுறை எப்படி செயலாற்ற முடியாதோ அதைப் போல ஆத்துமா இல்லாத சரீரம் செத்தது.

தேவன், இவ்வுலகில் உள்ள அனைத்து சிருஷ்டிப்புக்களுடன் இணைந்து செயல்பட, நித்தியகாலம் வாழ மனிதனை ஆத்துமா, சரீரம் இவைகளுடன் உண்டாக்கினார். அண்ட சராசரங்களையும் ஆளும் அதிகாரத்தையும், அவைகளை நடத்த சுயாதீனத்தையும் மனிதனுக்கு தேவன் அளித்திருந்தார். தேவன் மனிதனை நித்தியத் திற்குரியவனாகவே நம்பி படைத்திருந்தார். மனிதனே பூமியின் பேரரசனாக விளங்கினான். தேவனால் உண்டாக்கப்பட்ட பூமியை பண்படுத்தவும், காக்கவும் அதை நிரப்பும்படி பலுகிப் பெருகவும், மனிதனுக்குக் கட்டளையிட்டிருந்தார். (ஆதி 1:26-28 : 2 : 15 - 16) மனிதனுக்கருளப்பட்ட ஆளுகையின் - அதிகாரத்தின் பிரதான நோக்கமே ஜீவாதிபதியாகிய தேவனோடு அவன் எப்பொழுதும் ஐக்கியம் வைத்திருக்க வேண்டும் என்பதே. அவனுடைய ஐக்கியம் தேவனோடு உறுதியாக இருக்குமானால் அவன் வாழ்க்கை பயனுள்ள

தாக பாதுகாப்பானதாக, அன்பு நிறைந்ததாகக் காணப்படும். தேவனோடுள்ள ஐக்கியம் முறிக்கப்படுமேயானால் விளைவு பயனற்றதாகிவிடும். எதிர்பாராத விதமாக மனிதன் தேவனின் அற்புதமான திட்டத்தை குலைத்துப் போட்டான். நாம் தற்போது காணும் உலகமானது தேவனுடைய ஆதிக்கத்தில் உண்டான உலகம் அல்ல. அது மனித மீறுதல்களினால் தன்னுடைய ஆதி நிலைமையை இழந்து விட்டது.

அடுத்த அத்தியாயத்தில் ஆதாமின் மீறுதலினால் ஏற்பட்ட தற்கால அழிவினைக் குறித்து விளக்கமாகப் பார்க்கலாம்.

d

**அத்தியாயம் – 3**

# சாத்தானைக் குறித்தும், தீமையைக் குறித்தும் உள்ள மறை பொருள்

''உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது''

(I யோவான் 5 : 19)

''உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது''
(I யோவான் 5 : 19)

**தீமை ஏன் உலகில் காணப்படுகிறது?**

தேவன் அன்புள்ளவராக, சர்வவல்லமையுள்ளவராக இருந்தால், உலகில் ஏன் தீமையான காரியங்கள் நடைபெறுகின்றன. உலகில் காணப்படும் துன்ப, துயரங்களையும் நம் சொந்த வாழ்க்கையில் காணப்படும் வேதனைகளையும் தேவன் ஏன் தடுத்து நிறுத்துவதில்லை என்று நம் எண்ணத்தில் ஏற்படும் கேள்விகள், நமக்குள் குழப்பத்தையும், மன உளைச்சலையும் மற்றும் விரக்தியையும் கொண்டு வருகின்றன. பலர் எதையாவது பலிகடாவாக்க நினைத்து, தேவனையே குற்றப்படுத்தி அவர்மேல் கோபம் கொள்ளுகின்றனர். இம் மறை பொருளைப் புரிந்து கொள்ள வேதப் புத்தகமே நமக்கு உதவி செய்கிறது.

**சாத்தானின் வீழ்ச்சி**

தேவன் இயற்கையாகக் காணக்கூடிய உலகை மட்டுமல்ல காணமுடியாத பலவற்றையும் உண்டாக்கினார்.தேவன் தூதர்களை தனக்கும், மனுக்குலத்திற்கும் பணிவிடை செய்யும்படி உண்டாக்கினார் (சங் 103:20; எபி 1:14). பிரதான தூதனாகிய சாத்தான், பிசாசு என்றழைக்கப்படும் லூசிபர் தேவனால் அளிக்கப்பட்ட உதவியாளப் பணியை தள்ளிவிட்டு தேவனுக்கு விரோதமாக பெருமையான எண்ணங் கொண்டு மூன்றில் ஒரு பங்கு தூதர்களின் துணையோடு தேவனுடைய சிங்காசனத்தை கவிழ்த்துப் போட முயற்சித்துத் தோல்வி அடைந்தான். இச் செய்கையால் அவன் தேவனால் தள்ளப்பட்டான். (ஏசா : 14:12-17; எசே : 28:11-19; வெளி 12:4). அவனுக்காக நித்திய மரணம் நரகம் என்ற அக்கினிக் கடலை தேவன் ஆயத்தம் செய்து வைத்திருக்கிறார். சாத்தானும் அவனுடைய தூதர்களும் இன்னும் சிறைப்படுத்தப்படவில்லை என்றாலும் அவனும், அவனைப் பின்



பற்றுகின்ற அனைவருக்கும் அதற்காக ஒரு நாளை தேவன் நியமித்திருக்கிறார். (வெளி 20 : 10)

சாத்தான், தன் முதல் முயற்சியில் தோல்வியடைந்து தன்னுடைய செயல் திட்டத்தை மாற்றி அமைத்தான். தேவனை என்னால் தோற்கடிக்க முடியாததால் அவரால் நேசிக்கப்படும், அவருடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டிப்பின் கிரீடமாகிய மனிதனை தோற்கடிக்கத் திட்டமிட்டான். மனிதனை தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் செய்து, தேவனோடு அவனுக்குள்ள ஐக்கியத்தைக் குலைத்துவிட்டால் அவனை தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு அவனுக்குள்ளவற்றையெல்லாம் அபகரிக்கத் திட்டமிட்டான்.

**மனிதனின் வீழ்ச்சி**

ஆதாமும், ஏவாளும் தேவனால் படைக்கப்பட்ட அழகிய தோட்டமாகிய ஏதேனில் மகிழ்ச்சியுடன், தேவனோடுள்ள ஐக்கியத்தில் சிறப்பான முறையில் வாழ்ந்து வந்தனர். தேவன் அந்த அழகிய தோட்டத்தை பாதுகாவல் செய்யவும், பண்படுத்தவும், பயனுள்ளதாக்கவும், நிரப்பவும் ஆதாமுக்குப் பொறுப்பும், அதிகாரமும் அளித்திருந்தார். தோட்டத்தின் மத்தியிலுள்ள விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம் என்ற ஒரே கட்டளையை மட்டுமே தேவன் அவனுக்குக் கொடுத்திருந்தார் (ஆதி 3:3). இக்கட்டளையை மீறினால் ஜீவ வழி அடைபட்டுப் போகும். தேவனை விட்டு மனிதன் பிரிக்கப்பட்டு மரணமடைவான் என்பது தேவ நியதியாயிருந்தது.

தோட்டத்தைக் காவல் செய்ய வேண்டும் என்ற அடிப்படைப் பொறுப்பை ஆதாம் மீறி தேவனுடைய எதிரியாகிய சாத்தான் தோட்டத்தில் நுழைய அனுமதித்தான். ஏவாளை சாத்தானோடு பழக அனுமதித்தான். இறுதியாக தேவ கட்டளையை மீறி புசிக்க வேண்டாம் என்ற கனியை புசித்து சாத்தானின் வஞ்சக வலையில் விழுந்து போனான். சாத்தான் தேவனுக்கு விரோதமாக எழும்பி தேவனால் தள்ளளப்பட்ட பின்னரும் கூட தேவனால் தற்காலிகமாக

தனக் களிக்கப்பட்ட நடமாடும் உரிமை, சுயாதீனம், மற்றவர்களை வசீகரிக்கும் தன்மை ஆகியவற்றைத் தன்னகத்தே வைத்திருந்தான். தனக்களிக்கப்பட்டிருந்த பரலோகப் பதவியை மாத்திரமே சாத்தான் இழந்திருந்தான்.

சாத்தான் ஏவாளிடம் ''தேவன் உங்களிடம் தோட்டத்திலுள்ள ஏதாவது மரத்தின் கனியையும் புசிக்கக்கூடாது என்று கூறினாரா? என்றான்''. சாத்தான் ஏவாளோடு பேசும் போது அவள் தேவனுடைய அன்பையும், உண்மையையும் சந்தேகிக்க வேண்டும் என்ற நோக்கத் தோடே பேசினான். ஏவாள் சாத்தானிடம் ''தோட்டத்தில் இருக்கும் பழங்களை உண்ணலாம். ஆனால் தோட்டத்தின் நடுவில் உள்ள மரத்தின் கனியை மட்டும் நீங்கள் உண்ணக்கூடாது. அதை தொடவும் கூடாது. மீறினால் சாவீர்கள் என்று தேவன் சொல்லியிருக்கிறார்'' என்று கூறினாள். சாத்தான் ஏவாளிடம் ''நீங்கள் சாகவே சாவதில்லை. நீங்கள் அந்தக் கனியை உண்ணும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப் படும். நீங்கள் தேவர்களைப் போல நன்மை தீமையை அறிவீர்கள்'' என்றான் (ஆதி 3 : 5)

ஆதாமும், ஏவாளும் தேவன் தங்களுக்கு அளிக்க விரும்பாத விலையேறப்பெற்ற ஒன்றை சாத்தான் தங்களுக்கு அளிப்பதாக எண்ணி சாத்தானின் பொய்யை நம்பினார்கள். (ஆதி 3 : 5)

**மனிதனின் வீழ்ச்சியினால் ஏற்பட்ட பின் விளைவு**

சாத்தானின் தந்திரமான சூழ்ச்சியினால் மனிதன் தேவனை சந்தேகித்து ஜீவனுள்ள தேவனோடிருந்த தொடர்பை இழந்தான். தேவன் எவ்வளவேனும் பொய்யுரையாதவர், எந்த நன்மையையும் தங்களுக்கு வழங்காமல் இருக்க மாட்டார் என்ற உண்மையை காலம் கடந்து மனிதன் உணர்ந்தான். தேவனை நம்பி அவருக்குக் கீழ்ப் படியாமல் மனிதன் சாத்தானை நம்பி அவனுக்குக் கீழ்ப்படிந்த படியால் உலகத்தின் ஆளுகை அவர்களின் கையிலிருந்து சாத்தானால் பறிக்கப்பட்டு தேவ ஆளுகையைவிட்டு அழிவின், தீமையின், துன்பத்தின் தலைவனான சாத்தானுக்குச் சொந்தமாகி விட்டது.



மனிதனை தனக்கு அடிமையாக்கி அவனுடைய அதிகாரத்தை சாத்தான் பிடுங்கிக் கொண்டான்.

மனிதன் பாவம் செய்து தேவ மகிமையை இழந்து தன் அதிகாரத்தையும், நித்திய வாழ்வையும் இழந்தான். முதன்முறையாக அப்போது தான் மன அழுத்தத்தையும், குற்ற உணர்வையும், வெட்கத் தையும் அடைந்தான். தங்களின் அழகை சாம்பலுக்கும் பெலத்தை பெலவீனத்திற்காகவும், தைரியத்தை பயத்திற்கும் விற்றுப் போட் டனர். அவர்கள் தாங்கள் நிர்வாணமாக இருப்பதையும் தங்கள் பாது காப்பு இழந்து போனதையும் உணர்ந்தனர். தங்களின் நிர்வாணத்தை மூட இலை ஆடைகளை உண்டாக்கி அணிந்து தேவனிடமிருந்து தங்களையும் தங்கள் பாவத்தையும் மறைத்துக் கொள்ள மனிதன் முயற்சித்தான். ஆனால் வேதம்: ''தீமை உலகத்தில் வந்ததின் பல காரணங்களை வேதம் எடுத்துரைக்கிறது. முதலாவது பிசாசானவனும், தன்னுடைய ஆளுகையை மனிதனிடமிருந்து பறித்ததால் சாத்தான் மனிதர்களை துன்புறச் செய்து அவர்களை உருவாக்கின தேவனை வேதனைப்படுத்த விரும்புகிறான். மனமுடைந்த, அன்பு நிறைந்த தேவனிடமிருந்து ஒருவரும் தம்மை மறைக்க இயலாது'' (எபி 4 : 13)

இரண்டாவதாக தேவன் ஆதாமை உண்டாக்கி அனைத்து அதிகாரங்களையும் அவனுக்கு அளித்திருந்தாலும் அவனை ஒரு இயந்திரமாகவோ, பொம்மையாகவோ படைக்காமல் அவனை சுயசித்தம் உடையவனாக, நன்மையோ, தீமையோ அவனே தெளிவு செய்து கொள்ளவும் தக்கதாக சுயாதீனம் உடையவனாகவும், அவன் செயல்களை தேவன் மதிப்பவராகவே மனிதனைப் படைத்திருந்தார். அவனுடைய செயல்களின் பலன் நன்மையானாலும், தீமையா னாலும் மனிதனே பெற்றுக் கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக, மனிதன் தீமையை தடுத்து நிறுத்தவேண்டிய கடமையிலிருந்து தவறிப் போனான். அணையை அடைத்து வெள்ளத்தின் அழிவிலிருந்து மனுக்குலத்தைக் காக்க வேண்டிய ஆதாம் மடையை திறந்து அழிவின் வெள்ளமாகிய வியாதி, நாசம்,

மோசம், துன்பம், துயரம், அநீதி, கற்பழிப்பு, கொலை, கொள்ளை போன்ற தீமைகள் அனைத்தும் மனுக்குலத்தின் மேல் தன் பாவத்தால் வர விட்டுவிட்டான்.

உறவுகளில் பிரச்சனை, வேதனையுடன் பிள்ளைப் பேறு, வியர்வை, முட்கள், புதர்கள், போன்ற தீமையின் அனைத்து ஆதிக்கங் களும் மனிதனின் வீழ்ச்சியின் மூலம் உலகில் பிரவேசித்தது. ''முழு சிருஷ்டிப் பும் அழிவுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுவிக்கப்பட பிரசவ வேதனைப்படுகிறது'' (ரோமர் 8 : 18-23) என்று வேதம் சொல்கிறது.

தேவன் ஏதாவது செய்யக் கூடாதா? என்ற கேள்வி எழுகின்ற தல்லவா? அவர் செய்தது என்னவென்பதை நீங்கள் வாசிக்கலாம். தேவன் மனிதனை மீட்பதற்கான அதிசயத் திட்டத்தை செயல் முறைப் படுத்தினார். தேவன் உலகத்தில் நீதியைக் கொண்டு வருவார். அநியாயமாய் சிந்தப்பட்ட ஒவ்வொரு துளி இரத்தத்திற்கும் அநீதி யாய் நடத்தப்பட்ட மக்களுக்கும் நீதியை வழங்குவார்.

''அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமு மில்லை முந்தினவைகள் ஒழிந்து போயின என்று கூறியது. சிங்கா சனத்தின் மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்கு கிறேன் என்றார். பின்னும், அவர் : இந்த வசனங்கள் சத்தியமும், உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார். அன்றியும், அவர் என்னை நோக்கி: ஆயிற்று, நான் அல்பாவும், ஒமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத் தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன். ஜெயங் கொள்ளு கிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்வான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்'' (வெளி : 21:4-8).

d

அத்தியாயம் – 4

# சரீரம் மற்றும் ஆவிக்குரிய மரணங்களைப் பற்றிய மறை பொருள்

''பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்'' (எசே 18 : 4)

''பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்'' (எசே 18 : 4)

பென்ஜமின் பிராங்ளின் என்பவர், ''உலகில் மரணமும், வரி விதிப்பும் மட்டுமே நிச்சயம்'' என்றார். ஆனால் வேதத்தின் அடிப்படையில் பார்த்தால் மரணமே ஒரு வரிவிதிப்புத்தான். தேவன் ஆதாமை நோக்கி ''தோட்டத்தில் உள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்'' என்று கட்டளையிட்டார் (ஆதி 2:16-17).

**மரணம் என்றால் பிரிவு**

மரணம் என்பதின் அர்த்தத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மரணம் என்பது வாழ்வின் முடிவோ, நிரந்தர அழிவோ அல்ல. பலர் மரணத்திற்கு பின் ஒன்றும் இல்லை, மரணத்தோடு எல்லாம் முடிந்து விடுகிறது என்று நினைக்கின்றனர். தேவனால் உண்டாக்கப்பட்டு ஜீவ சுவாசத்தைப் பெற்ற ஜீவ ஆத்துமாக்கள் நித்திய காலமாக நிலைத்திருக்கும். அதற்கு அழிவில்லை. மரணம் என்ற பதத்தின் சரியான பொருள் பிரிவு என்பதாகும்.

இரண்டு விதமான மரணங்கள் உண்டு. 1. ஆவிக்குரிய மரணம் 2. சரீர மரணம்.

ஆவிக்குரிய மரணம் என்பது மனிதன் தேவனோடுள்ள ஐக்கியத்தை அல்லது தொடர்பை விட்டுப் பிரிவது.

சரீர மரணம் என்பது சரீரத்தை விட்டு ஆத்மா வெளியேறுவது. சரீர மரணத்தில் சரீர அவயவங்களின் செயல்பாடுகள் நின்று விடுகின்றன.

ஆதாம் தேவ கட்டளையை மீறி பாவம் செய்த போது இவ்விரு மரணங்களும் உலகில் பிரவேசித்தன. ஆவிக்குரிய மரணம் உடனடியாக நடந்தது, அதைத் தொடர்ந்து படிப்படியாக சரீர மரணம் ஏற்பட்டது. மரத்திலிருந்து ஒரு கிளையை முறித்துப் போட்டால் அது சிறிது நேரம் வாடாமலிருந்து பின்பு வாடி உலர்ந்து போவது போல மனிதன் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டாலும் சரீரத்தில் சில காலம் உயிர் வாழ்ந்து பின்னர் மரணம் அடைகிறான்.



**பாவத்தினால் மரணம் உண்டானது**

தேவன் ஒருபோதும் இவ்விரு மரணத்தை விரும்புவது இல்லை. சரீரத்திற்கும் ஆத்மாவிற்கும் உள்ள தொடர்பும் ஆத்துமாவிற்கும் தேவனுக்கும் உள்ள தொடர்பும் ஒரு காலமும் முறிக்கக் கூடாதது; ஏனென்றால் இந்த நித்திய தொடர்பு தேவனின் இருதயமும் மனிதனின் இருதயமும் இணைந்து ஒருவரில் ஒருவர் அன்பின் ஐக்கியத்தில் உறவாடுதலுக்கென உருவாக்கப்பட்டது ஆகும்.

தேவன் கொடுத்த ஒரே கட்டளையை மனிதன் கைக் கொண்டிருந்தால் விலையேறப் பெற்ற தேவனின் ஐக்கியம் மனிதனோடு முறிக்கப்படாதிருந்திருக்கும் விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசிக்கக் கூடாது என்பது தான் அவ்வொரே தேவ கட்டளை. மனிதன் தன்னிச்சையாகச் செயல்பட அதிகாரமிருந்த போதும் அந்த மரமானது மனிதனின் கீழ்ப்படிதலின் உத்திரவாதத்தை வெளிப்படுத்த ஏற்படுத்தப்பட்டது. மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை உடன்படிக்கை போன்றது. உடன்படிக்கையின் அடையாளம் வைக்கப்பட்ட மரம். இது ஒரு திருமண மோதிரம் போன்றது. ஆதாமும், ஏவாளும் கட்டளையை மீறாமலிருந்தால் ஜீவனையும், தவறினால் மரணமும் சம்பவிக்கும். ஆனால் ஆதாமும், ஏவாளும் கனியைப் புசித்த போது தேவனோடிருந்த தங்கள் உடன்படிக்கையை உடைத்துப் போட்டார்கள்.

**மரணம் அனைவருக்குள்ளும் பிரவேசித்தது**

மனுக்குலத்தின் முதல் பெற்றோர்களின் மீறுதலினால் ஏற்பட்ட விளைவாகிய மரணம் அவர்களிலிருந்து பிறந்த மனுஷர் அனைவருக்கும் தொடர்ந்தது. அவர்கள் செய்த பாவத்தால் பிறந்த

அனைவரும் பாவிகளாகவே பிறந்தனர். பாவிகளாகப் பிறந்தபடியால் தேவனோடு உள்ள தொடர்பு அற்றவர்களாகவே பிறந்தனர். சரீர வாழ்க்கை தொடர்ந்தது. ஆனால் அதன் முடிவு மரணம். வியாதிகள் பரம்பரையாகத் தொற்றுவது போல பாவமும், மரணமும் முதற் பெற்றோர்களாகிய ஆதாம், ஏவாள் மூலம் மனுக்குலத்திற்குள் தொடர்ந்தது. வேதம் கூறுகிறது, ''ஒரே மனுஷனாலோ பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது''. (ரோமர் 5 : 12) மேலும் '' எல்லாரும் பாவம் செய்து........ பாவத்தின் சம்பளம் மரணம்'' (ரோமர் 3 : 23, 6 : 23) என்று வேதம் கூறுகிறது.

**மரித்தவர்கள் சென்றடையும் இடம்**

மரிப்பவர்களுக்கு என்ன சம்பவிக்கிறது? அவர்களின் மரணத் தின் தொடர்ச்சி என்ன? மனிதன் மரித்த பின் அவன் ஆத்மா தேவ னோடு இளைப்பாறவோ அல்லது தண்டனை பெறும்படி சிறைச் சாலை (பாதாளம்) போன்ற இடத்திற்கோ செல்லுகிறது. லூக்கா 16 : 19 முதல் 31 வரையுள்ள வேதப்பகுதியை வாசித்தால் கூடுதலான விவரங்களை காணலாம்.

இயேசு இரண்டு மனிதர்களைப் பற்றிய ஓர் சம்பவத்தைக் கூறுகிறார். சப்பிரமாய் வாழ்ந்த ஐசுவரியவான் ஒருவன். மற்றொருவன் ஏழையும், வியாதி நிறைந்தவனும், தள்ளப்பட்டவனுமாயிருந்தான். இருவரும் மரித்தனர்; ஏழையாகிய லாசரு ஆறுதலும், சமாதானமும் நிறைந்த இளைப்பாறும் இடத்திற்கும், ஐசுவரியவான் அழுகையும் பற்கடிப்புமுள்ள பாதாளத்திற்கும் கொண்டு செல்லப்பட்டனர்.

நமது சிந்தனைக்குப் பல காரியங்கள் இச்சம்பவத்தில் அடங்கி உள்ளது. முதலாவதாக ஏழையோ, பணக்காரனோ, படித்தவனோ படிப்பறிவில்லாதவனோ எல்லோரும் மரித்தே ஆக வேண்டும். இரண்டாவதாக மரணத்திற்குப்பிறகு இரண்டு இடங்கள் மட்டுமே உண்டு. ஒன்று சமாதானமும், ஆறுதலும் நிறைந்த இளைப்பாறுதலின் இடம், மற்றொன்று வேதனையும், அழுகையும் நிறைந்த பாதாளம் என்ற இடம். ஆனால் இரு இடங்களிலும் உள்ளவர்களுக்கு சுய



நினைவும், சூழ்நிலையும் தெளிவாக உள்ளதை உணர முடிகிறது. மரித்த அனைவருக்குமே சுய நினைவு உண்டு. சரீர உணர்ச்சிகளும் தொடருகிறது. ஐசுவரியவான் தீயின் கொடுமையையும், லாசரு ஆறு தலையும் அனுபவிப்பது நன்றாக விளங்குகிறது. உணர்ச்சிகளும், பூ உலக வாழ்வின் நினைவுகளும் மரித்தவனுக்கும் உண்டு என்பதை இச்சம்பவத்தில் காண்கிறோம்.

ஐசுவரியவான், தன் அன்பு சகோதரர் மேலிருந்த கரிசனையால் அவர்கள் இவ்விடத்திற்கு வராமல் தடுக்கப்பட வேண்டும் என்று அவன் தன் உணர்வுகளை வெளிப்படுத்துகிறான். இரக்கத்திற்காக கெஞ்சும் அவனுடைய கூக்குரல் தனது மனவருத்தத்தை காட்டுகிறது. ஆபிரகாம் என்ற பழைய ஏற்பாட்டு பக்தனையும் இங்கு பார்க்கிறோம். இதன் மூலம் நாம் மரித்தவுடன் நமக்கு முன் மரித்தவர்களுடன் இணைந்திருப்போம் என்பது தெளிவாகிறது. மரித்தவர்கள் தங்கள் ஜீவிய காலத்தில் நடைபெற்றவைகளைக்குறித்து பேச அறிவும், ஞானமும், ஞாபகசக்தியும் உடையவர்களாக இருப்பார்கள் என்றும் அறிகிறோம். இறுதியாக இரக்கத்திற்காக கெஞ்சிய வேண்டுதல் நிராகரிக்கப்பட்டது. காரணம் காலம் கடந்து விட்டது.

தற்போது நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாழ்க்கை நாம் மரித்த பின் வாழும் இடத்தை நிச்சயிக்கிறது. ''வேதம் தேவன் அன்பாகவே இருக்கிறார்'' (1 யோவான் 4 : 16) என்று கூறுகிறது. அன்பு அடிப்படை யானது. தேவனின் இயற்கையான தன்மை அன்பு. அவருடைய அன்பு, நம்பிக்கையின் பாத்திரம், நீதி, பரிசுத்தம், கிருபை, இரக்கம் என்பவை களின் மூலம் வெளிப்படுகிறது. தேவன் மனிதனோடு ஏற்படுத்திய உடன்படிக்கை ''பாவத்தின் சம்பளம் மரணம்'' என்பதே. இவ்வுடன் படிக்கை அன்புள்ள தேவனுக்கு எதிரிடையாக உள்ளது.

அவருடைய நீதி பரிசுத்தத்தின் நியாயத் தீர்ப்பை அளிக்க வேண்டும். அவரது நீதி உடன்படிக்கையைக் காக்க வேண்டும் என்று கூறுகிறது. ஆனால், அவரது இரக்கமும், கிருபையும் அவருடைய சிருஷ்டிப்பும் மனிதனும் அழிந்து போகக்கூடாது என்று முறையிடுகிறது.

தேவன் தான் நேசித்த தமது சிருஷ்டியாகிய மனுக்குலத்தை சாத்தானின் கட்டுப்பாட்டில் விடக்கூடாது என்றே விரும்பினார். உடனடியாக தேவன் செயல்பட வேண்டும். பொய்யுரையாத தேவன் உடன்படிக்கையின் சட்டத்தை மாற்றவோ, மறுக்கவோ முடியாது; அப்படியானால் மனிதன் தேவனோடிருந்த உடைத்துப் போட்ட ஐக்கியத்தை இணைப்பது எப்படி? மனிதன் தேவனோடு ஒப்புரவாவது எப்படி? தேவனுடைய மனப்போராட்டம் தீர்வது எப்படி? மரணச்சிறை யிலிருந்து தேவன் மனிதனை மீட்பது எப்படி? இப்படிப்பட்ட கேள்வி களுக்கான பதிலை இப்புத்தகம் வெளியாக்கும்.

d

அத்தியாயம் – 5

# நற்கிரியைகள் குறித்த மறை பொருள்

‘‘எந்த மனுஷனும் --- கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக
நீதிமானாக்கப்படுவதில்லை’’ (ரோமர் 3 : 20)

''எந்த மனுஷனும் --- கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை'' (ரோமர் 3 : 20)

இந்த அத்தியாயத்தில் மனிதன் தன்னுடைய நற்கிரியைகளால் தேவனோடு ஒப்புரவாக முடியாது என்பதை விவரமாகக் காண்போம். நாம் நமது சொந்த முயற்சியால், நமது மதச் சடங்காச்சாரங்களால், நல் நடக்கையால், புண்ணியச் செயல்களால் தேவனோடுள்ள உறவை புதுப்பித்துக் கொள்வது என்பது கூடாத காரியம் ஆகும். ஆனால் நமக்கு ஒரு நற்செய்தி உண்டு. தேவனோடு நாம் ஒப்புரவாகும்படி, ஒப்புர வாகுதலுக்கான கிரயத்தை நமக்காக அவரே செலுத்தி இருக்கிறார். ஆகவே, நாம் இரட்சிப்படைய தாழ்மையுடன் அவரது திட்டத்தைப் பின்பற்றுவதே ஒரே வழியாகும்.

### தேவனுடைய வழியா அல்லது என்னுடைய வழியா?

மனிதனுடைய வீழ்ச்சி என்பது தேவனுக்கு விரோதமாக கலகம் செய்து நமது ஆத்துமா தன்னிச்சையாக செயல்படுவதாகும். ''உன் வழியில் செய்'' ''என் வழியில் செய்தேன்'' என்பதே அமெரிக்கர்களின் உயிரில் கலந்த கலாச்சாரம். உலகின் தத்துவங்களும், ஞானிகளும் கூறும் ஆலோசனை யாதெனில் ''உன் விருப்பம் போல் நட'' என்ற அழிவின் தத்துவம் தான். இது புதிதாய் தோன்றிய கோட்பாடு அல்ல. ஆதாமும், ஏவாளும் ஆதியிலேயே ''உன் வழியில் செய்'' என்று அவர்களின் வழியில் சென்று செய்ததின் விளைவே அழிவுக்குக் காரணம். அதுவே இன்றும் தொடர்கிறது.

ஆதாமும், ஏவாளும் பாவம் செய்தவுடன் அத்தி மர இலை களால் தங்களை மூடிக் கொள்ள ஆடைகளை உண்டாக்கிக் கொண் டனர். இது தங்கள் பாவங்களை மறைக்க எடுத்த நிரந்தரமற்ற முயற்சி யாகும்.

இவர்களின் இச்செயல் பயனற்ற, ஏற்றுக் கொள்ள முடியாத செயலாக தேவன் கருதினார். ஏதேன் தோட்டத்திலிருந்து அவர்களை



விரட்டி, அவர்களை மூடும்படியான ஆடையை முதல் பலியாக ஒரு மிருகத்தை அடித்து அதன் தோலினால் உண்டாக்கினார். இச்செயல் பாவத்தை மன்னிக்க பரிகாரமாக தேவன் பலியை எதிர்பார்க்கிறார் என்பதை செயலில் காண்பிக்கிறது.

ஆதாம், ஏவாளின் குமாரனாகிய காயீன், நிலத்தின் கனிகளை தேவனுக்குக் காணிக்கையாக ( பரிகாரமாக) செலுத்தி தேவ வழியை அறியாமல் தன் வழியில் செய்தான். இவனுடைய காணிக்கை தேவ னுக்கு முன் ஏற்றுக்கொள்ளப்படாததும், பயனற்றதுமாக இருந்தது. மற்றொரு மகனாகிய ஆபேல் தேவனால் நியமிக்கப்பட்ட மிருகத்தை பலியிட்டு தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டான். ஆபேலின் பலி ஏற்றுக் கொள்ளப்பட்டதையும் தன் காணிக்கை ஏற்றுக் கொள்ளப் படாததையும் கண்டு காயீன் எரிச்சலடைந்தான். அவனுடைய பொறாமை ஆபேலை கொலை செய்யுமளவிற்கு கொண்டு சென்றது.

''மனுஷனுக்குச் செம்மையாய் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்'' (நீதி 14:12) என்று வேதம் கூறுகிறது.

மனிதன் சுயநல விரும்பியாகவும், தற்புகழ்ச்சியடைய விருப்ப முள்ளவனாகவும் மாறிவிட்டான். தன்னைச் சுற்றியுள்ளவர்கள், தன் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறான். குழந்தைகள் பிறந்து குறுகிய காலத்திலேயே தன்னாதிக்கச் செயல் களால் பெற்றோர்களைக் கலங்கடிக்கின்றனர்.

அழகான, மென்மையான, அற்புதமாகக் கருதப்படும் குழந்தை களின் கொடூரத் தன்மையானது அவர்களின் விருப்பங்கள் நிறைவேற்றப்படாமல் இருக்கும் போது வெளிப்படுகிறது. இந் நிலைகள் காலத்தால் மாற்றம் பெறுவதில்லை. குழந்தைகள் எப்பொழுதும் சுயநலமாக இருக்க வேண்டும் என்று எவருமே போதிப்ப தில்லை என்றாலும், தங்கள் சுய விருப்பங்கள் நிறைவேற பலவிதமான யுக்திகளைப் பிள்ளைகள் வளர வளர கையாளவும் செய்கின்றனர். சுயநலம் மனுக்குலத்தில் மிஞ்சி நிற்கிறது.

**அடிப்படையில் மனிதன் நல்லவன்; அது அவனுடைய தவறல்ல**

தத்துவஞானிகள் பலரும் அடிப்படையில் மனிதன் நல்லவன் என்றே கூறுகின்றனர். இக்கூற்று இனிமையான, நேர் கூற்றாக இருந்தாலும், தீமையின் துவக்கமும் அதன் தாக்கமும் எங்கு துவங் கியது என்ற கேள்வி அக்கூற்றை ஆட்டம் காணச் செய்கிறது. தீமையின் துவக்கத்தை மனிதனின் சூழ்நிலைகளே உருவாக்கிற்று என்று சூழ்நிலைகளை காரணம் காட்டி மனிதன் தனக்குள்ள பொறுப் பிலிருந்து தப்பித்துக் கொள்ள பார்க்கிறான்.

பெரும்பாலும் தீமையானது உடைந்த குடும்பங்கள், ஏழ்மை, கல்வியறிவில்லாமை, தன்னறிவில்லாமை ஆகியவற்றால்தான் ஏற்படுகிறது என்று கூறுகின்றனர். மனிதனின் சூழ்நிலைகள் தான் அவனை தீயவனாக மாற்றுகிறது என்றும் கூறுகின்றனர். அவன் சூழ் நிலைகளை மாற்றி அவனை நல்லவன் என்று கூறினால் நல்லதையே செய்வான் என்கின்றனர். மனிதன் தன் உள்மனதின் ஆழத்தில் தான் நல்லவன் என்று நினைத்தால் அவன் செய்கை நல்லதாக வெளிப் படும் என்ற ஆதாரமற்ற இக்கூற்று உண்மையல்ல, சூழ்நிலைகளி னால் அல்ல, தீமையானது மனிதனுக்குள் குடி கொண்டிருக்கும் ஆழமான தன்மையின் வெளிப்பாடாகும். மனிதன் சூழ்நிலைகளினால் உருவாக்கப்படுகிறனவல்ல.

பழியை மற்றவர்கள் மேல் சாட்டுவது ஏதேனில் துவங்கியது. ஆதாம் பூரணமான நல்ல சூழலில் தான் வாழ்ந்து வந்தான். அவன் குற்றம் சாட்ட பெற்றோர்களோ, நசுக்கும் சமுதாயமோ இல்லை. ஏதேனில் ஏழ்மையோ, குறைவுகளோ ஒன்றும் இல்லை. யாரும் ஆதாமைப் பார்த்து நீ (கெட்டவன்) தீயவன் என்று கூறவில்லை. அவன் தேவனுடைய கண்மணியாகவே இருந்தான். இந்த அற்புத மான, அருமையான சூழ்நிலையில் ஆதாம் பாவம் செய்து பழியை தன் மனைவியின் மீது சாட்டிவிட்டான். ''என்னுடனே இருக்கும்படி நீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள் என்றான்.'' (ஆதி 3:12) ஏவாள் பழியை பாம்பின் மேல் சாட்டினாள்.



''சர்ப்பம் என்னை வஞ்சித்தது நான் புசித்தேன்'' (ஆதி : 3:13) என்றாள். நாம் பாவம் செய்து விட்டு, பழியை வேறொருவர் மேல் அல்லது சூழ்நிலைகளின் மேல் சாட்டக்கூடாது. நமது பாவங்களுக்கான உத்திரவாதத்தை நாமே ஏற்று ஆக வேண்டும்.

**''நான் அவர்களைவிட நல்லவன்''**

நமது பாவ எண்ணங்கள், வார்த்தைகள், செயல்கள் நமக்கு குற்ற உணர்வையும், வெட்கத்தையும் உண்டாகச் செய்கிறது. மற்ற வர்களுடன் நம்மை ஒப்பிட்டு நம்மை நாமே ஆறுதல்படுத்திக் கொள்ளுகிறோம். பரலோகம் செல்ல நான் மற்றவர்களைக் காட்டிலும் நல்ல தகுதியுள்ளவனாகவே காணப்படுகிறேன் என்கிற தவறான எண்ணம் நமக்குள் காணப்படுகிறது. நான் யாரையும் கொலை செய்ய வில்லை. திருடவில்லை, அரசாங்கத்தை ஏமாற்றவில்லை, ஏழை களுக்கு தானதருமம் செய்கிறேன், நான் எந்த தீய காரியத்தையும் செய்யவில்லை. நான் ஏன் பரலோகம் செல்ல முடியாது? என்று கேள்வி எழுப்புகிறோம். ''தங்களை கொண்டு தங்களை அளந்து கொண்டு தங்களுக்கே ஒப்பிட்டுக் கொள்ளுகிற அவர்கள் புத்திமான் களல்ல'' ( 2 கொரி 10:12) என்று பவுல் கூறுகின்றார்.

ஒருவன் மற்றவனை விட சிறந்தவனாக காணப்படலாம். ஆனால் அது எவ்விதத்திலும் ஒருவனை தகுதிப்படுத்தாது. உங்கள் சரீரம் முழுவதும் கேன்சர் இருந்தாலும், ஒரு சிறு பகுதியில் இருந் தாலும், கேன்சர் வியாதி வியாதிதான். அரைக் கிணற்றைத் தாண்டி னாலும், கால் கிணற்றைத் தாண்டினாலும் விளைவு ஒன்று தான். தேவனுடைய அளவுகோல் பூரணமானது. நீங்கள் மற்றவரைவிட கொஞ்சம் நல்லவரா? அல்லது அதிகம் நல்லவரா என்பதல்ல கேள்வி. நீங்கள் பூரணமானவரா என்பதே கேள்வி. உங்கள் சிந்தனை, செயல், வார்த்தை இவைகளில் பாவம் இல்லாதவராக இருக்கின் றீர்களா? உங்கள் நேர்மையான பதில் ''இல்லை'' என்பதாக இருந்தால் உங்கள் வாழ்வை இரட்சிக்கும் சத்திய வழியை அடையும் பாதையில் சென்று கொண்டிருக்கிறீர்கள்.

**நல்லவராக இருப்பது மட்டும் போதாது**

சில ஆண்டுகளுக்கு முன் எங்கள் சபையினரால் மேற்கொள்ளப் பட்ட கருத்துக் கணிப்பில் 80 சதவீதம் பேர் பரலோகம் செல்ல நல்லவராக இருந்தால் போதும் என்ற கணிப்பை பதிவு செய்துள்ளனர். இக்கருத்து மக்களை ஏமாற்றும் போலியான ஒன்றாகும். பரலோகம் செல்லுவதற்கும் நல்லவராக இருப்பதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. ஒரு குருடனை வாகனப் போக்குவரத்து நெரிசல் நிறைந்த சாலையைக் கடக்கச் செய்வது, தன்னுடைய கேன்சர் வியாதியை குணப்படுத்திவிடும் என்ற நம்பிக்கையைப் போன்றது.

ஆதாமின் பாவம் மனிதனுடைய ஜென்ம சுபாவத்தையும், இருதயத்தின் நிலையையும் முற்றிலும் கெடுத்துப் போட்டபடியால் எந்த நற்கிரியையும், அதைச் சரிபடுத்த முடியாது. ஆதாம், ஏவாள் தங்களைத் தாங்களே இரட்சித்துக் கொள்ள முடியாது. ஆனால் தேவன் எதிர்ப்பார்க்கும் பூரணத் தன்மையுடைய ஒரு நபரால் மட்டுமே ஒருவரை இரட்சிக்க முடியும் என்பதை தெளிவுபட தேவன் காண் பித்தார்.

‘‘கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு ஒருவரும் பெருமை பாராட்டாத படிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. (எபே 2:89) என்று பவுல் கூறுகிறார்.

d

அத்தியாயம் – 6

# பலியினாலும், இரத்தத்தினாலும் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையைப் பற்றிய மறை பொருள்

‘‘இரத்தஞ்சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பில்லை’’ (எபி 9 :22)

‘‘இரத்தஞ்சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பில்லை’’ (எபி 9 :22)

**தேவன் பொய் உரையாதவர் :**

தேவன் உடன்படிக்கை செய்பவர். உடன்படிக்கை என்பது இருவரை நிரந்தரமாகக் கட்டுப்படுத்தும் ஒரு ஒப்பந்தம் ஆகும். இவ்வத்தியாயத்தில் மூன்று முக்கிய உடன்படிக்கைகளைப்பற்றிக் காண்போம்.

வேதாகம விசுவாசமானது ஆதாம், ஆபிரகாம், மோசே என்பவர்களோடு தேவன் செய்து கொண்ட உடன்படிக்கையை ஆதாரமாகக் கொண்டது. ஒரு காலத்தில் மனிதன் வாக்குக் கொடுத்தாலே அது மாறாத உடன்படிக்கையாகக் கருதப்பட்டது. பின்னர் சொல்லும் சொல்லை கையடித்து உறுதிப்படுத்துவது வழக்கத்தில் வந்தது. இன்றோ உடன்படிக்கையை மீறுவதும், பொய் சொல்லுவதும், ஏமாற்றுவதும் வாழ்க்கையில் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையாக மாறிவிட்டது. அனைவரும் இதையே செய்கின்றனர். தலைவர்கள், அரசியல்வாதிகள், விற்பனையாளர்கள், வழக்கறிஞர்கள், பத்திரிகை நிருபர்கள், பெற்றோர்கள், தொழிலாளிகள், முதலாளிகள், மதபோதகர்கள் யாவருமே பொய் பேசுகின்றனர், ஏமாற்றுகின்றனர். மறைக்கப்படாமல் முழு உண்மையை யாரும் பேசுவதில்லை. சமுதாயத்தில் யாரைத்தான் நம்புவது? நம்பிக்கையற்ற பொய்யான சமுதாயத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம் என்பதில் சந்தேகமே இல்லை.

எந்த உடன்படிக்கையும் ஏற்படுத்தப்பட்டுள்ள நபர்களின் நம்பகத் தன்மையைப் பொறுத்ததே ‘‘தேவன் எவ்வளவேனும் பொய்யுரையாதவர்’’ (எபி 6 : 18, தீத்து 1 : 2, எண் 23 : 19, 2 தீமோ 2 : 13) என்று வேதம் திட்டவட்டமாக அறிவிக்கிறது. ஏற்கனவே தேவன் பொய்யுரையாதவர் என நாம் பார்த்தோம். தேவன் பொய் சொல்லமாட்டார் என்பதல்ல; ஆனால், பொய் சொல்ல அவரால் முடியாது. அனைத்தும் அவர் சொல்வது சத்தியமே. அவர் சொல்வதைச் செய்வார். தேவன் மாறாதவர் (மல் 3 : 6, I சாமு 15 : 29, யாக் 1 : 17)



என்றும் வேதம் கூறுகிறது. தேவன் பேசினால் அந்த வார்த்தையை எந்தச் சூழ்நிலையாலும், எந்த சக்தியாலும் மாற்ற முடியாது.

சர்வ வல்லமையுள்ள தேவனுடைய வார்த்தையின் நம்பகத் தன்மையால் சமாதானமும், இளைப்பாறுதலும், பாதுகாப்பும் நமக்கு உண்டு. தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாத படியினாலே தமது பேரிலே தானே ஆணையிட்டார் (எபி 6:13) தேவன் தமது ஜீவனைக் கொண்டு உடன்படிக்கையை ஏற்படுத்தியுள்ளார்.

**தேவன் ஆதாமோடு செய்து கொண்ட உடன்படிக்கை : மனிதனின் வீழ்ச்சிக்குப் பின்**

ஆதிமுதலே உறவின் உடன்படிக்கை கீழ்ப்படிதல் மூலமாகவே பாதுகாக்கப்படும் என்று தேவன் ஸ்தாபித்து இருந்தார். ஆதாமின் வீழ்ச்சிக்குப்பின் ஐக்கியத்தின் உடன்படிக்கைக்குத் திரும்பும் அற்புதமான மீட்பின் திட்டத்தை வெளிப்படுத்தத் துவங்கினார். தேவன் சிருஷ்டிப்பு காட்டிலும், மனிதன் இவைகளைக் காட்டிலும் மேலானவராக இருந்தும் அவரே சிருஷ்டிப்பின் மையமாய் இணைக்கப்பட்டிருந்தார்.

மனிதனின் பாவத்தால் தேவன் தம்மில் ஒரு பகுதியை இழந்து போனது மட்டுமின்றி அவனுடைய மீட்பில் மற்றுமொரு பகுதியையும் இழக்க வேண்டி இருந்தது. ஆதாமும், ஏவாளும் அனைத்தையும் இழந்தார்கள். விலக்கப்பட்ட கனியைப்புசித்த உடனே தாங்கள் நிர்வாணிகள் என்று மட்டுமல்ல ஆவிக்குரிய மரணமடைந்ததையும் உணர்ந்து கொண்டனர்.

தேவன் அருளிய ஜீவ ஆத்துமா, பாதுகாப்பான போர்வை, அவர்களின் பெலன், அவர்களின் மதிப்பு யாவையும் இழந்து போயினர். அவர்களை மூடி இருந்த மகிமை எடுபட்டு போயிற்று. ஆதாமும், ஏவாளும் தங்களுக்குள்ளும், சிருஷ்டிப்புக்களுடனும், எல்லாவற்றிற்கும் மேலாக தங்களை உருவாக்கின தேவனோடிருந்த ஐக்கியத்தையும் இழந்து போனார்கள். தங்கள் அதிகாரங்களை இழந்து தாழ்த்தப்பட்டு போனார்கள். ஆழ்கடலுக்குள் செல்பவர்கள், பிராண

வாயுவிலிருந்து துண்டிக்கப்படுவது போல ஆதாமும், ஏவாளும் மெய் ஜீவனுக்காக திக்குமுக்காடினார்கள். அவர்களின் தேவனுக்கு எதிரான செயலும், எதிரியாகிய சாத்தானின் தந்திரமும் அவர்களை மரணத் திற்கு நேராக வழி நடத்தியது. தாங்கள் இழந்து போனதை மீட் டெடுக்க முயன்று உதவியில்லாமல் தோல்வியுற்றுப் போனார்கள்.

தீக்கோழி புதை மணலில் தலையைப் புதைத்துக் கொள்வது போல, அண்ட சராசரங்களை உண்டாக்கி அனைத்தும் தெரிந்த, அறிந்த, காண்கின்ற தேவனிடம் தங்களை மறைத்துக் கொள்ள முடியும் என்று நினைத்தனர். உடைந்த கண்ணாடி விளக்கை பசை போட்டு ஒட்ட முயற்சிக்கும் சிறுவனைப் போல் அத்தி இலைகளால் தங்கள் பாவத்தை மூட முயன்றனர். அவர்கள் தாங்களாகவே எல்லாவற்றையும் சரி செய்துவிடலாம் என்று எண்ணினர், ஆனால் கீழ்ப்படியாமல் விலக்கப்பட்ட கனியைப் புசித்து, கடித்து தங்களுக்கு அழிவைத் தேடிக் கொண்டனர்.

ஆதியாகமம் மூன்றாம் அதிகாரம், ஆதாம் ஏவாளின் பாவம் செய்த பின் நடைபெற்ற சம்பவங்கள் கூறுகிறது. பகலில் குளிர்ச்சி யான வேளையில் மனிதனோடு உலாவும்படி தோட்டத்தில் பிரவே சித்தார். சர்வ வல்லமையுள்ள தேவன் என்ன சம்பவித்தது. என்பதை அறிந்திருந்தாலும் ''ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்?'' என்று கேட்டார். தேவன் ஆதாமோடு இடைப்பட்ட போது, தன் தவறை ஒத்துக் கொள்வதை விட்டு விட்டு பழியை ஏவாள் மீது சுமத்தினான் அன்று ஏதேனில் தொடங்கிய அந்த நிலை இன்றும் மாறவேயில்லை. இன்றும் மனிதன் தன் தவறுக்கு பொறுப்பேற்றுக் கொள்வதில்லை.

பாவத்திற்கு உண்டான நியாயத் தீர்ப்பை தேவன் வெளிப் படுத்தினார். தேவன் ஆதாம், ஏவாள், சாத்தான் ஆகிய மூவரையும் நியாயம் தீர்த்தார். தேவனுடைய நியாயத் தீர்ப்பினால் சிருஷ்டிப்பு சபிப்பிக்கப்பட்டு உலகம் தற்போதுள்ள நிலைமைக்கு தள்ளப்பட்டது. சாபத்திலிருந்து முட்கள், வேதனையுடன் பிள்ளைப்பேறு வியாதி, வியர்வை, மரணம் யாவும் உண்டாயிற்று. தேவன் நீதியும் உண்மை யும், பரிசுத்தமும் உள்ளவரானபடியால் நியாயத்தீர்ப்பு அவசியமான



தாகக் காணப்பட்டது. ஆனால் தேவன் மிகுந்த கிருபையும், இரக் கமும், தயவும் நிறைந்தவர். அவருடைய நிலையான அன்பு மனித னுக்காக செயல்பட ஆரம்பித்தது.

ஆதாம் ஏவாள், மனுக்குலம் அனைத்தும் சபிக்கப்பட்ட, நிர்பந்த மான நிலையிலிருந்த போது தேவன் தமது அளவற்ற அன்பினால் அவர்களை மீட்கும் திட்டத்தை வெளிப்படுத்தினார். மீட்பு என்பது விலைக்கிரயம் கொடுத்து பெறுவதாகும். மனிதனை சாத்தானின் பிடியிலிருந்து மீட்கவும், தேவனோடு துண்டிக்கப்பட்ட தொடர்பை இணைக்கவும் ஓர் விலைக்கிரயம் செலுத்தப்பட வேண்டியது அவசிய மாயிற்று. அடகு வைக்கப்பட்ட ஒரு வீடு இடிக்கப்பட்டுப் போனாலும் அதன் மேலுள்ள அடகுத் தொகை இல்லாமல் போகாது. அடகுத் தொகை திரும்பச் செலுத்தப்பட வேண்டும். அதோடு, அவ்விடிக்கப் பட்ட இடத்தில் கட்டப்படும் வீட்டிற்கான கிரயமும் சேர்ந்து கொள்ளும். சாத்தான் மூலம் தனக்கு நல்லதொரு கிரயம் கிடைக்கப் போகிறது என்று நம்பி அவனுக்கு தன்னை விற்றுப் போட்டான் ஆதாம். ஆனால் அவ்வீடு அழிக்கப்பட்டுப் போனது. சாத்தான் அதை தன் சொந்தமாக்கிக் கொண்டு அதற்கான கிரயத்தை உடனே செலுத்தும்படி கேட்டான். ஆதாமிடமோ, கொடுப்பதற்கு ஒன்றுமில்லை; எனவே ஆதாமும், அவனுக்குப் பின் வந்த சந்ததி களும் சாத்தானின் அடிமைகளாக்கப்பட்டனர். மனிதனை தேவன் எப்படி மீட்பார்? அம் மீட்பின் கிரயம் என்ன?

### இரத்தத்தினால் உண்டான உடன்படிக்கை

மிகப் பழமையான மேற்கத்திய திரைப்படம் ஒன்றில் திடகாத் திரமான ஒரு வீரனும், மாடுகள் மேய்க்கும் ஓர் சிறுவனும் தங்கள் கைகளை கத்தியினால் கீறி ஒருவர் இரத்தத்தை மற்றவருடைய இரத்தத்துடன் கலந்து இரத்த சம்பந்தமான சகோதரர்களாக மாறி விடுவதாக காட்டப்படுகிறது. இந்தச் சடங்கு முன்னிலை வகிக்கும் அமெரிக்க தேசத்திடமிருந்து வந்ததல்ல; பழமை வாய்ந்த கலாச் சாரங்களான ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு ஆசியாவிலிருந்து வந்தது.

ஆனால் இவ்வுடன்படிக்கையை ஆதியிலேயே திட்டம் பண்ணினவர் தேவன்.

''இரத்த உடன்படிக்கை'' என்பதின் உண்மையான அர்த்தத்தை அறிந்து கொள்வது அவசியம். உடன்படிக்கை என்ற வார்த்தையின் இலக்கியப் பொருள் அறுத்தல் மற்றும் இணைத்தல் என்பதாகும். இரத்த உடன்படிக்கை பழமையானதும், உறுதியானதும், நிலையானது மாகும். இரத்த உடன்படிக்கை என்பது இருவருக்கு இடையே ஏற்படு வது அல்லது இருதரப்பினருக்கு வல்லமை மிக்க ஒருவரால் ஏற்ப டுத்தப்பட்டு வலிமையற்ற ஒருவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏற்படுத் தப்படும் ஒப்பந்தம் ஆகும். இவ்வுடன்படிக்கையை உயிருள்ளவரை மீற முடியாதது மட்டுமல்ல. இவ்விருவரும் வாழ்நாள் முழுவதும் இரத்த சொந்தங்களாக எண்ணப்படுவர்.

இந்த இரத்த உடன்படிக்கை, பிறப்பினால் சொத்துரிமை உட்பட உண்டாகும் அனைத்து உரிமைகளையும், அளிக்கிறது. உடன் படிக்கையின் உத்திரவாதத்திற்கு இருதறத்தாருமே பொறுப்பு. உடன்படிக்கை காக்கப்பட்டால் உன்னத ஆசீர்வாதம் உடைக்கப் பட்டால் விளைவு சாபமாகும். தேவன் தமது ஜீவசுவாசத்தை ஆதாமின் நாசியில் ஊதியபோதே மனிதனோடு இத்தகைய நிலை யான உடன்படிக்கையை ஸ்தாபித்தார்.

**இக்கட்டான சூழ்நிலை**

ஆதாம் செய்த மீறுதலின் பலனாக உடன்படிக்கை சீர்குலைக்கப் பட்டது; ஆனால் கலைக்கப்படவில்லை. தேவன் இக்கட்டான இச் சூழ்நிலையில் உடன்படிக்கையின் முறிவை அப்படியே விட்டுவிட விரும்பவில்லை. ஆகையால் ஆதாமை மீட்கவும் அழிவின் பாதை யிலிருந்து தப்புவிக்கவும் மாற்று வழியை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இந்த மாற்று வழியானது இரண்டு தேவைகளை சந்திக்கக்கூடிய தாக இருக்க வேண்டும். முதலாவது மீட்பர் ஆதாமின் சந்ததியி லிருந்து பிறவாத பாவமற்றவராக இருக்க வேண்டும். இரண்டாவதாக



ஆதாம் சந்தித்துத் தோற்றுப் போன அதே சோதனைகளில் வெற்றி பெறும் வல்லமையும் தூய்மையும் நிறைந்தவராக ஆதாமின் தோல் வியை வெற்றியாக மாற்றக் கூடியவாராகவும் இருக்க வேண்டும். அவர் தேவனோடுள்ள ஐக்கியத்தை எந்நிலையிலும் முறிக்காதவராக, பாவத்தையும், சோதனையையும், சாத்தானையும் ஜெயிப்பவராக இருக்க வேண்டும்.

எல்லாம் அறிந்த தேவன் இச்சூழ்நிலையை காணாதவர் போல் இல்லாமல் உலக தோற்றத்திற்கு முன்னே இப்பிரச்சனைக்குத் தீர்வை யும் வைத்திருந்தார். நியாயத்தீர்ப்பின் விளைவினால் உண்டான இருண்ட, நிலையற்ற, நம்பிக்கையற்ற நிலையின் மத்தியில் தேவன் நம்பிக்கையின் ஒளியை வாக்குப் பண்ணினார். தேவன் தீர்க்க தரிசனமாக புதுப்பித்தலையும், ஆதிநிலையையும் திரும்பக் கொண்டு வருவேன் என்று வாக்குப் பண்ணினார். சர்ப்பத்தைப் பார்த்து ''உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார்; நீ அவர் குதிங் காலை நசுக்குவாய்'' (ஆதி : 3:15).

**பலியினால் உண்டான இரத்தம் - தேவனோடுள்ள தொடர்பை காத்துக் கொள்ள திட்டம் :**

ஆதாம் உடன்படிக்கையை சீர்குலைத்துப் போட்டான். ஆனால் விலக்கப்படவில்லை. உடன்படிக்கை காக்கப்பட தேவன் இடைக் கால திட்டம் ஒன்றை ஏற்படுத்தினார். அடிபட்ட காயத்திலிருந்து பீறிடும் இரத்தத்தை தடுக்க கட்டுப்போடுவது போல தேவனோடுள்ள ஐக்கியத்தின் விரிசல் பெரிதாகி விடாமல் பாதுகாக்க திட்டம் ஒன்று தேவைப்பட்டது. இத்திட்டம் மனிதன் எவ்வாறு தேவனோடு உள்ள ஐக்கிய உறவை காப்பது எனவும், தீர்க்க தரிசனத்தால் உறைக்கப்பட்ட உடன்படிக்கையின் மாற்று யார் என அறியவும் உதவும். இம்மாற்றுத் திட்டம் மீட்பின், புதிய உடன்படிக்கை ஏற்படுத்தப்படும் வரை நிலைத் திருக்கும்.

தேவன் தமது இரண்டாம் அல்லது இடைக்கால உடன்படிக்கை யாக ஒரு மிருகத்தைக் கொன்று, இரத்தம் சிந்தி மனிதனின்

நிர்வாணத்தை மூடினார். இச்செயல் மூலம் இடைக்கால நிவாரணம் இரத்தம் சிந்தும் பலியே என்பதை முத்திரையிட்டு தெளிவுபடுத்தினார். (ஆதி 3:21). இச்சம்பவம் இரத்தம் சிந்தும் பலியாக ஆதியாகமத்தில் விவரிக்கப்படாவிட்டாலும் பலியின் அவசியத்தை வேதம் வெளிச்சத் திற்குக் கொண்டு வருகிறது. இரத்தம் சிந்தப்பட்டு தோலினால் ஆடைகள் செய்யப்பட்டது. இரத்தம் ஜீவனையும், மரணத்தையும் குறிக்கிறது. இச்செயலிலிருந்து பாவம், மரணத்தைக் கொண்டு வருகிறது என்றும் இரத்தம் மட்டுமே பாவத்தை நிவிர்த்தியாக்கும் கிரயம் என்பதும் தெளிவாகிறது. அதுமட்டுமின்றி ஆதாமும், ஏவாளும் தங்களைத் தாங்களே இரட்சித்துக் கொள்ள முடியாது என்ற சத்தியத்தை தேவன் அவர்களுக்கு விளங்கப் பண்ணினார். குற்ற மில்லாத ஒருவரே குற்றவாளிக்கு பதிலாக மரிக்க வேண்டும். குற்றமில்லாத இரத்தமே குற்றவாளியை மீட்க முடியும். ஆதாமும், ஏவாளும் தோலுடைகளை ஏற்றுக் கொண்ட போது இடைக்கால நிவாரணம் ஏற்றுக் கொள்ளப் பட்டு செயல்பட துவங்கியது. எழுத்தின் படி அவர்கள் குற்றவாளி களாக இருந்தாலும் குற்றமற்ற இரத்தம் அவர்களை மூடியிருந்த இது தேவன் தற்காலிகமாக மனிதனை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமைந்தது. வேதாகமத்தின் முதற்பகுதியாகிய பழைய ஏற்பாடு இடைக்கால (தற்காலிக) பாவ நிவாரணத்தையும், முடிவான எதிர்கால நிவாரணத்தின் நம்பிக்கையையும் தீர்க்க தரிசனமாகக் கூறுகிறது.

**ஆபிரகாமோடு தேவன் செய்து கொண்ட உடன்படிக்கை - வாக்குப் பண்ணப்பட வித்தின் சந்ததியையும் தேசத்தையும் பற்றியது.**

வரப்போகிற உடன்படிக்கையின் பலியாகிய வித்தை ஆதா முக்கு தேவன் வாக்குப் பண்ணினார் (ஆதி 3:15). தேவன் ஒரு ஆட்டுக் குட்டியின் மூலம் ஆபிரகாம் என்ற மனிதனோடு உடன்படிக்கை செய்தார். இதன் மூலமாக வாக்குரைக்கப்பட்ட மீட்பர். எந்த தேசத்தி லிருந்து, சந்ததியிலிருந்து வருவார் என்பதை விளங்கப் பண்ணினார். தேவனால் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தமாக அளித்த நிலப்பரப்பு 'இஸ்ரவேல்' தேசம் ஆகும். ஆபிரகாமும், அவன் மனைவி சாராளும் வயது சென்று பிள்ளைகள் அற்றிருந்தாலும் தேவன் அவர்களுக்கு



அருளிய ''அவனைப் பெரிய ஜாதியாக்கி, அவன் மூலம் பூமியின் சகல சந்ததிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்ற'' (ஆதி, 12:3; 18:18; 22:18) வாக்குத்தத்தத்தை தம் உண்மையின்படி நிறைவேற்ற அவனுடைய முதிர் வயதில் தேவ வல்லமையால் ஓர் குழந்தையை கொடுத்தார். அவனுக்கு ஈசாக்கு என்று பெயரிட்டனர். ஈசாக்கு ரெபேக்காள் என்ற பெண்ணை விவாகம் செய்து ஏசா, யாக்கோபு என்ற இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றான். இஸ்ரவேல் என பெயர் மாற்றப்பட்ட யாக்கோபு பன்னிரெண்டு குமாரர்களைப் பெற்று யூதர்களின் தகப்ப னானான். தேவன் ஆபிரகாமுக்கு வாக்குப் பண்ணிய படி அவனி லிருந்து தேசம் தோன்றி, அந்த தேசத்திலிருந்து முழு உலகிற்கும் ஆசீர்வாதமாக ''மீட்பர்'' தோன்றினார்.

**மோசேயுடன் தேவனுடைய உடன்படிக்கை**

முதன் முதலாக தேவன் ஆதாமோடு மீட்பரைக் குறித்து உடன் படிக்கை பண்ணினார் (ஆதி:3). பின்பு ஆபிரகாமோடு மீட்பராகிய வித்தின் இரத்த சம்பந்தத்தையும், தேசத்தைக் குறித்தும் தேவன் உடன்படிக்கை பண்ணினார் (ஆதி : 18). மோசேயின் மூலமாக வேத புத்தகத்திலுள்ள யாத்திராகமத்தில் ஆராதனையைக் குறித்து விளக்க மான முறைகளையும், ஆராதனை மூலமாக வாக்குத் தத்தம் பண்ணப் பட்ட 'வித்தை' குறித்த அடையாளத்தையும் தீர்க்க தரிசனமாகக் கூறினார்.

இஸ்ரவேல் என்று பெயர் மாற்றப்பட்ட யாக்கோபு பல்வேறு அற்புதமான சம்பவங்களுக்குப் பின் தன் பிள்ளைகளோடு எகிப்தில் குடியேறினான். ஆரம்பத்தில் அரசனின் விருந்தாளிகளாக நடத்தப் பட்டு செழிப்புற்ற மக்கள் 70 பேர், நானூறு ஆண்டுகளுக்குப் பின் 20 லட்சம் மக்களாகப் பெருகினர். பார்வோன் எபிரேயர்கள் தன் ஆட்சிக் கும், எகிப்தின் கலாச்சாரத்திற்கும் அச்சுறுத்தலாக இருப்பார்கள் எனக் கருதினான். அவன் அவர்களை நசுக்கி, அடிமைகளாக்கி நடத்தினான். எபிரெய ஜனத் தொகையைக் கட்டுப்படுத்தும்படி அவர்களின் ஆண்பிள்ளைகளைக் கொல்ல திட்டமிட்டான். மோசே என்பவனும் கொல்லப்பட வேண்டிய எபிரெய குழந்தையாக இருந்தான். மோசேயின்

பெற்றோர் பார்வோன் கட்டளையிலிருந்து அவனைக் காப்பாற்ற முடியாமல் ஒரு நாணற் பெட்டியில் அவனை வைத்து நைல் நதியில் விட்டு விட்டனர். தேவ சித்தத்தின்படி பார்வோனுடைய குமாரத்தி அவனைக் கண்டெடுத்துக் கொண்டு போய் அரண்மனையில் தன் மகனாக வளர்த்தாள். மரணத்துக்குக் குறிக்கப்பட்ட எபிரெய அடிமைப்பையன் எகிப்தின் அரண்மனையில் சகல சாஸ்திரங்களை யும் கற்றுத் தேறினான். மோசே வளர்ந்த பின் தன் ஜனங்கள் அநியாய மாக நடத்தப்படுவதைக் கண்டு எகிப்தியனாகிய ஓர் ஆளைக் கொன்று போட்டான். தன் கொலை தண்டனைக்குப் பயந்து எகிப்தை விட்டோடி மத்திய கிழக்குப் பாலைவனத்தில் தாழ்மையான மேய்ப் பனாக மாறினான். அரசாள வேண்டியவன் ஆண்டியானான்.

யூதமக்கள் எகிப்தின் அடிமைத்தனத்தில் கடுமையாக நடத்தப் பட்ட போது ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் உடன் படிக்கையின் தேவனை நோக்கி விடுதலைக்காக கண்ணீரோடு மன்றாடினர். தேவன் மனதுருகி அவர்களின் மன்றாட்டைக் கேட்ட ருளினார். மோசே மந்த நாக்கும், மதிக்கப்படாத நிலையில் இருந் தாலும் தேவன், அவனை அழைத்துத் தம்முடைய வல்லமையினால் நிரப்பி அவனை விடுதலை நாயகனாக, மீட்பவராக அனுப்பினார். தேவன் மோசேயை நோக்கி ''நீ போய் பார்வோனிடம் இஸ்ரவேலரை விடுதலை செய்'' என்று கேட்கும்படி சொன்னார். பார்வோன் மறுத்த போது பார்வோனின் மனம் மாறும் படி பல கொடிய வாதைகளை எகிப்தியருக்குள் தேவன் அனுப்பினார். கொடூரமான, கடின இருதய முள்ள பார்வோன் பத்தாவது வாதையை காணும் மட்டும் இஸ்ர வேலரை அனுப்பாமல் கடின இருதயத்துடன் இருந்தான்.

மோசே தேவனுடைய கட்டளையின்படி இஸ்ரவேலர் பழுதற்ற ஓர் ஆட்டுக் குட்டியைத் தெரிந்தெடுத்து, அதை அடித்த அதன் இரத் தத்தை வீட்டின் நிலைச்சட்டங்களில் பூசும்படி கூறினான். சங்காரத் தூதன் இரத்தத்தைக் கண்டு, அந்த வீட்டை விட்டு கடந்து போவான். இரத்தம் பூசப்படாத வீட்டில் உள்ள தலைப்பிள்ளை மரித்துப் போகும். பார்வோன் எச்சரிக்கையை அசட்டை செய்தபடியால் அவனுடைய



தலைப்பிள்ளையும், எகிப்தியரின் அனைத்து தலைப் பிள்ளைகளும் ஒரே இரவில் மரித்துப் போயினர். பார்வோன் பயந்து நடுங்கி, 20 லட்சம் இஸ்ரவேலர் எகிப்தை விட்டு வெளியேற அனுமதித்தான்.

இஸ்ரவேலர் எகிப்தை விட்டு வெளியேறிய சிவந்த சமுத் திரத்தை அடைந்த போது கடின இருதயம் படைத்த பார்வோன் தன் சேனையுடன் இஸ்ரவேலரை மீண்டும் பிடிக்கப் பின் தொடர்ந்தான். இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரத்திற்கும், பார்வோனின் சேனைக்கும் இடையில் சிக்கிக் கொண்டார்கள். மோசே தேவனை நோக்கி ஜெபித்து தன் கோலை உயர்த்த செங்கடல் பிளந்து இஸ்ர வேலருக்கு வழி விட்டது. பத்திரமாய் இஸ்ரவேலர் செங்கடலை கடந்தனர். ஆனால் பார்வோனும் அவனுடைய வீரர்களும் செங்கடலில் அமிழ்ந்து போயினர். யூதர்கள் அந்த நாளை கொண்டாடும்படி இன்றும் பஸ்கா என்னும் பண்டிகையை ஆசரித்து வருகின்றனர். இச்சம்பவம் தேவன் தெரிந்து கொண்ட தம் மக்களோடு செய்து கொண்ட உடன் படிக்கையை மீண்டும் உறுதி செய்தது. இதிலும் உடன்படிக்கை இரத்தத்தினா லேயே ஏற்படுத்தப்பட்டது. ஆபிரகாமோடு பலியினால் (இரத்தத்தால்) உடன்படிக்கை செய்த தேவன் மீண்டும் பாவமற்ற ஆட்டுக்குட்டி இரத்தத்தினால் இஸ்ரவேலருக்கு பாதுகாப்பையும், விடுதலையையும் அளித்தார். இப்போதோ இஸ்ரவேலர் தேவனை ஆராதிக்க விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் ஆராதிப்பது எப்படி என்று அறியாதிருந் தார்கள்.

தேவன் சீனாய் மலைக்கு மோசேயை அழைத்து ஆராதிக்கும் ஸ்தலத்தின் திட்டத்தையும் அதில் பணி செய்யும் மனிதரைக் குறித்தும் கூறி வாழ்க்கை முறை, வழிபடும் முறை மற்றும் பத்து கட்டளை களையும் கொடுத்தார்.

யூத ஆராதனை முறைகளில் 'பாவ நிவர்த்தி நாள்' அல்லது பிராயசித்த நாள் என்பது நமது விவாதத்திற்கு மிக முக்கியமான ஒன்றாகும். ஆண்டு தோறும் ஒருநாள் தேசம் முழுமைக்கும் பாவ நிவாரணத்திற்காக பலி செலுத்தப்படும். அந்நாளில் ஆசாரியன் தன்னை சுத்திகரித்தபின் சாதாரண மனித உடையில் தன் பாவங்

களுக்கான பலியைச் செலுத்தியபின், மக்களுக்கான நிவாரண பலியைச் செலுத்துவான். இரண்டு ஆட்டுக் கடாக்கள் தெரிந்து கொள்ளப்படும். ஒன்று பலி ஆடு மற்றது போக்காடு. போக்காடு விடுதலை பண்ணப்படும். ஆசாரியன் பலியாட்டின் மேல் தன் கைகளை வைத்து மக்களின் பாவங்களை அறிக்கை செய்வான். அப்படி செய்வதால் தேசத்தின் பாவம் பலி ஆட்டின் மேல் சுமத்தப் பட்டு விடும். அதன்பின் ஆடு பலியிடப்பட்டு அதனுடைய இரத்த மானது பாவத்தின் பரிகாரமாக அமைந்துவிடும். அதன் பின்னர் ஆசாரியன் ஆட்டின் இரத்தத்தோடு ஆசரிப்புக் கூடாரத்தின் உள் பிரவேசித்து கிருபாசனம் என்ற உடன்படிக்கை பெட்டியின் மேல் படைப்பான். தேவன் அந்த பலியை அங்கீகரித்தபின் திரும்பி வந்து போக்காட்டின் மேல் கைகளை வைத்து ஜனங்களின் பாவங்களை அறிக்கையிட்டு அதன் கழுத்தில் சிகப்பு நூலை கட்டி விரட்டி விடுவார்கள். பாவமறியாத ஆட்டின் மரணம் பாவத்திலிருந்து விடுதலை அளிப்பதை இச்செயல் காண்பிக்கிறது.

யூத மக்களின் ஆராதனை முறைகள் ஒவ்வொன்றும் வரப் போகும் மீட்பர், வாக்குப் பண்ணப்பட்ட மேசியா அல்லது தேவ ஆட்டுக் குட்டியின் அடையாளமாகவே வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வரப்போகும் மேசியா, யூதராக இஸ்ரவேல் தேசத்திலிருந்து, ஆபிரகாம் சந்ததியில் இருந்து வெளிப்படுவார் எனப் பார்த்தோம்.

அவர் பாவமற்றவராக, பரிசுத்தராக, தேவனோடு பூரண ஐக்கியம் உள்ளவராக ஆதாமோடு தேவன் செய்த உடன்படிக்கையின் நிபந்தனையை நிறைவேற்றுபவராக இருக்க வேண்டும். பாவமற்ற அவர் பாவிகளுக்காக பாவமில்லா ஆட்டுக் குட்டியைப் போல் மனுக் குலத்திற்காக மரிக்க வேண்டும்.

d

அத்தியாயம் – 7

# மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய மறை பொருள்

‘‘மேசியா வருகிறார் என்று அறிவேன்’’ (யோவான் 4 : 25)

''மேசியா வருகிறார் என்று அறிவேன்'' (யோவான் 4 : 25)

தேவன் தம்முடைய வாக்குத் தத்தத்தை நிறைவேற்றுகிறார். இதுவரையிலும் வாக்குப் பண்ணப்பட்ட வித்தாகிய மேசியாவிற்கு இருக்க வேண்டிய பல தகுதிகளை நாம் கற்று வந்தோம். அவர் வந்து சாத்தானை சங்கரித்து, ஆதாமின் பாவத்தால் குலைத்துப் போடப் பட்டவைகளை செவ்வையாக்குவார். அவர் ஒரு யூதனாகவும், ஆபிரகாம், ஈசாக்கு யாக்கோபு என்பவர்களின் வழித்தோன்றலாகவும் இஸ்ரவேல் தேசத்திலிருந்தே வருவார். அவர் ஆதாமைப் போல மனிதராகவும், ஆனால் பாவமற்றவராகவும், பிதாவோடு இடை விடாமல் தொடர்புடையவராக இருக்கும் பூரணராகவும் இருப்பார். மற்றுமொரு முக்கிய தகுதியாக மனிதனின் பாவ வித்தாக இல்லாமல் மீட்பிற்காக இறுதி பலியாக மரிக்கக் கூடியவராக (பரிசுத்தவித்தாக)வும் இருப்பார். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஏற்ற காலத்தில் அவருடைய திட்டத்தை வெளிப்படுத்துவார்.

### தேவனுடைய ஏற்ற நேரத்தில்

இஸ்ரவேல் மக்கள் தங்கள் சரித்திரத்தில் தேவனுடைய வாக்குத் தத்தங்களை மறந்து, அவைகளை விசுவாசியாமலும் போனார்கள். பல சமயங்களில் தேவனுடைய உடன்படிக்கைகளை முறித்தும் போட்டார்கள். தேவன் தம்முடைய தீர்க்க தரிசிகளையும், செய்தியாளர் களையும் எழுப்பி மக்களை எச்சரித்தார். தீர்க்கதரிசிகள் மக்களை மனந் திரும்பும்படியாகவும் தேவனோடு ஐக்கியம் கொள்ளும்படியாகவும், தூய்மையாக வாழும்படியாகவும் மக்களை எச்சரித்தனர். ஆவிக்குரிய நிலைமையில் மக்கள் சிலசமயம் முன்னேறவும், பல சமயம் பின் மாறவும் செய்தனர். இது ஒரு தொடர் கதையாக நடைபெற்றது. தேவ ஜனங்களை தேவன் தீர்க்கதரிசிகள் மூலம் எச்சரித்தபோது மேசியாவைக் குறித்த பல தகவல்களும், அடையாளங்களும் கூறப்பட்டு மக்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தினர். அப்படி மேசியாவைக் குறித்துச் சொல்லப்பட்ட எல்லா விவரங்களையும் இந்நூலில் எழுத இடம் போதாது. ஆனாலும் நாம் புரிந்து கொள்வ தற்கு சிலவற்றைக் கவனிப்பது நல்லது.



மீகா என்ற தீர்க்கதரிசி எருசலேமுக்கு தெற்கே பெத்லகேம் என்ற சிற்றூரில் மேசியா பிறப்பார் என்று முன்னறிவித்தார். (மீகா 5 : 2) ஏசாயா என்ற தீர்க்கதரிசி மேசியா ஒரு யூத கன்னிகையினிடத்தில் தேவனால் பரிசுத்த ஆவியின் மூலம் அதிசயமாக பிறப்பார் என்று அறிவித்தார். (ஏசாயா 7 : 14, 9 : 6, 7).

### கன்னிகையிடம் மேசியா பிறத்தல்

கிறிஸ்துவுக்குப் பின் முதலாம் நூற்றாண்டில், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு யூதர்கள் ரோம ஆட்சியாளர்களால் நசுக்கப் பட்டு, ஒடுக்கப்பட்டு ஆவிக்குரிய வீழ்ச்சியடைந்த நிலையில் சோர்வுற்றுக் காணப்பட்டார்கள். அவர்களின் மதத் தலைவர்கள் வல்லமையற்றவர்களாயிருந்தனர். அவர்களின் அரசியல் தலைவர்கள் ரோம சக்ரவர்த்தியின் கைப்பொம்மைகளாக இருந்தனர். ஏசாயா, மீகா என்ற தீர்க்கதரிசிகள் தீர்க்க தரிசனம் உரைத்து எழுநூறு ஆண்டுகள் கடந்து விட்டது. கடைசித் தீர்க்கதரிசி மக்களை எச்சரித்து நானூறு ஆண்டுகள் கடந்து போயிற்று. இப்படிப்பட்ட இருள் சூழ்ந்த காலத்தில் தேவன் தம்முடைய மவுனம் கலைத்து மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்க செயல்பட துவங்கினார்.

காபிரியேல் என்னும் தேவதூதன், யோசேப்பு என்ற மனிதனுக்கு மனைவியாக நியமிக்கப்பட்ட மரியாள் என்ற கன்னிகைக்கு காட்சி அளித்து, ''நீ பரிசுத்த ஆவியினால் கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய். அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக. அவர் தேவனு டைய குமாரன் எனப்படுவார்'' (லூக் 1:26-35) என்று உரைத்தார். சில நாட்களுக்குப் பின்பு தேவதூதன் யோசேப்பிற்குச் சொப்பனத்தில் தோன்றி ''உன் மனைவியாகிய மரியாளிடத்தில் சம்பவித்ததைக் குறித்து சந்தேகப்படாதே. அது தேவனால் உண்டானது. அவள் பரிசுத்த ஆவியினால் கர்ப்பம் தரித்து ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக. ஏனெனில் அவர் தமது

ஜனங்களின் பாவங்களை சுமந்து தீர்ப்பார்'' (மத் 1:18-25) அவளை மணந்துக் கொள்ள சந்தேகப்படாதே'' என்று உரைத்தான்.

மரியாள் ஓர் ஆண் பிள்ளையைப் பெற்று, அவருக்கு இயேசு என்று பெயரிட்டாள். வயல்வெளியில் இருந்த மேய்ப்பர்களுக்கு ஒரு தூதன் தோன்றி ''இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகி மேசியா என்னும் இரட்சகர் உங்களுக்காகப் பிறந்து இருக்கிறார் என்று அறிவித்தான். மேய்ப்பர்கள் பயத்துடனும், ஆச்சரியத்துடனும் சென்று குழந்தையைக் கண்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள். இயேசு பிறந்த சில நாட்களில் வானசாஸ்திரிகள் கிழக்கிலே ஓர் விநோதமான நட்சத்திரத்தை கண்டனர். அந்நட்சத்திரம் நகர்வதைக் கண்டு பின் தொடர்ந்தனர். அந்த நட்சத்திரம் பிள்ளையாகிய இயேசு இருந்த இடத்திற்கு வழி நடத்தியது. அவர்கள் இயேசுவாகிய பிள்ளையைக் கண்டு பொன், வெள்ளைப்போளம், தூபவர்க்கும் ஆகியவற்றைக் காணிக்கையாகப் படைத்து அவரை தொழுது கொண்டனர்.

கன்னி மரியாளின் குழந்தை வாக்குதத்தம் பண்ணப்பட்ட மேசியாவாகவும், உடன்படிக்கையின் அடையாளமாகவும் இருப்பதற்குரிய எல்லா தகுதிகளையும் பெற்று இருந்தது. எல்லா தீர்க்க தரிசனங்களும், வாக்குத்தத்தங்களும் நிறைவேறிற்று. இயேசு ஸ்தீரியினத்திடத்தில் பிறந்தபடியால் மனிதனாக இருந்தார். மரியாள் மூலமாக ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் சந்ததியாகக் காணப்பட்டார். மீகா தீர்க்கதரிசியின் முன்னறிவிப்பின்படி பெத்லகேமிலும், ஏசாயா முன் அறிவித்தபடி ஒரு கன்னிகையினிடத்திலும் பிறந்தார். பரிசுத்த ஆவியானவரால் உற்பவித்தபடியால் ஜென்ம பாவமற்றவராக இருந்தார். இத்தருணதில் கவனிக்கப்பட வேண்டிய மற்றுமொரு முக்கிய கருத்து என்னவெனில் ''இயேசு பசிசுத்த ஆவியினால் உற்பவிக்கப்பட்டு பிறந்தபடியால் அவர் தேவனாகவும் இருந்தார். தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. (கொலோ 2:9).



ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனோடு இருந்தது; அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் மூலமாக எல்லாம் உண்டாயிற்று. தேவ வார்த்தை (மனு உருவமானார்) மனுஷனானார். அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார் : அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. தேவனுடைய வார்த்தை என்றழைக்கப்பட்ட நித்தியமானவர் மனுஷ சாயலைத் தரித்துக் கொண்டார்.

இப்பொழுது இவர் வளர்ந்து தாம் மேசியா என்பதை திருஷ்டாந்தப்படுத்த வேண்டும். பிதாவோடு எப்பொழுதும் ஐக்கியம் உடையவராக பாவமற்ற வாழ்க்கையை வாழ வேண்டும். மனுக் குலத்தின் பாவங்களைப் போக்க மோசேயினால் சொல்லப்பட்ட அனைத்துத் தகுதிகளையும் உடைய பலியாக தன்னை நிறுத்த வேண்டும். இயேசுவின் பிறப்போடு இணைந்த சாட்சிகளான தூதர்கள், மேய்ப்பர்கள், நட்சத்திரம், வானசாஸ்திரிகள் என்பன போன்ற சான்றுகள் இருந்தும் இயேசு முப்பது ஆண்டுகள் அமைதியாக வாழ்ந்தார்.

**அவரின் ஞானஸ்நானம்**

வாக்குத்தத்தத்தின் வித்து வெளி உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டிய காலம் வந்தது. மேசியாவின் முன் நடப்பவரும், இயேசுவின் ஒன்றுவிட்ட சகோதரனுமான யோவான் மேசியாவின் வருகையை முன் அறிவித்து மனந்திரும்புதலைப் பிரசங்கித்தான். அவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொண்டவர்கள் தங்களின் ஒப்புக் கொடுத்தலை வெளிப்படுத்தும் வண்ணமாக ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர். இயேசுவும் யோவானால் ஞானஸ்நானம் பெறும்படியாக தான் நதிக்கு வந்தார்.

இயேசுவை யோவான் கண்ட மாத்திரத்தில் ''இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி'' என்ற வெளிப்பாட்டை மக்களுக்கு அறிவித்தான். யோவான் தன்னுடைய அறிக்கையில்

இயேசுவே வாக்குப் பண்ணப்பட்ட பாவம் போக்கும் பலி என்பதை தெளிவாக அறிவித்தான். இயேசுவும் ஞானஸ்நானம் பெற்று கரை ஏறின உடனே, பரிசுத்த ஆவியானவர் புறாவைப் போல் ரூபம் கொண்டு அவர் மேல் வந்து இறங்கினார். பிதாவான தேவன் வானத்திலிருந்து ''இவர் என் நேசகுமாரன், இவரிடத்தில் பிரியமாய் இருக்கிறேன்'' என்றார்.

**அவருக்குண்டான சோதனை**

அதன் பின்னர் இயேசுவானவர் பரிசுத்த ஆவியானவரால் வனாந்திரத்திற்கு வழி நடத்தப்பட்டார். வனாந்திரத்தில் இயேசு நேருக்கு நேர் சாத்தானைச் சந்தித்தார். ஏதேன் தோட்டத்தில் ஆதாமுக்கு ஏற்பட்ட சோதனை போலவே இயேசுவிற்கும் ஏற்பட்டது. இயேசுவிற்கு ஏற்பட்ட சோதனைகளின் நோக்கமே ஆதாமைப் போலவே இவரும் தேவனின் வழியை விட்டு விலகி, சாத்தானின் வழியில் நடக்க வேண்டும் என்பதே. இயேசுவானவர், சாத்தானின் அதிகாரத்தை உரித்து போட்டு மனிதனை அவனுக்குரிய உன்னதமான இடத்தில் நிலை நாட்டுவதற்காகவே உலகிற்கு வந்தார் என்பதை சாத்தான் நன்கு அறிவான். ஆகவே பிசாசு இயேசுவானவரை உயரமான மலை உச்சிக்கு அழைத்துச் சென்று உலகத்தின் சகல ராஜ்யங்களையும் ஒரு நிமிடத்திலே அவருக்குக் காண்பித்து இவைகள் எல்லாவற்றின் மேலுள்ள அதிகாரத்தையும் இவைகளின் மகிமையையும் உமக்குத் தருவேன், இவைகள் எனக்கு ஒப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளை கொடுக்கிறேன் (லூக் 4:6) என்று கூறினான்.

இச்சம்பவம் ஏதேன் தோட்டத்தில் ஆதாமின் கரத்திலிருந்து சகல அதிகாரத்தையும், உரிமையையும் சாத்தான் தந்திரமாகப் பிடுங்கிக் கொண்டதை காண்பிக்கிறது. ஆனால் இப்பொழுது இச்சோதனையின் முடிவோ இயேசுவானவர் எவ்வளவேனும் அவனுக்கு வளைந்து கொடுக்காமல் உறுதியாக சாத்தானை எதிர்த்து நின்றார். இயேசு எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராகக் காணப்பட்டார். (எபி 4 :15).



**இயேசுவின் அற்புதங்களும் ஊழியமும்**

அனைத்து சோதனைகளும் முடிந்த பின்பு இயேசுவானவர் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் நிறைந்தவராக தமது ஊழியத்தைத் துவக்கினார். தேவ சேனையின் முழு வல்லமையோடு சாத்தானின் அதிகாரங்களை முறிக்க துவங்கினார். பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார் என்று அப்போஸ்தலர் யோவான் கூறுகிறார். (1 யோவான் 3:8) நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். தேவன் அவரோடுகூட இருந்தபடியால் அவர் நன்மை செய்கிறவராகவும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராகவும் சுற்றித் திரிந்தார். (அப் 10:38).

இயேசு செய்த ஒவ்வொரு அற்புதமும் அவரே வாக்குப் பண்ணப்பட்ட மேசியா என்பதற்கு அடையாளமாகக் காணப்பட்டது. குருடரின் கண்களை திறந்தார், ஊமையரை பேச வைத்தார், செவிடர்களைக் கேட்கச் செய்தார், காற்றை அதட்டினார், நீரின் மேல் நடந்தார், அலைகளை அமைதிப்படுத்தினார், முடவர்களை நடக்கச் செய்தார், அப்பங்களை பெருகப் பண்ணினார், மரித்தோரை உயிரோடெழுப்பினார். அவர் அதிகாரமுடன் பிரசங்கித்தார். எதிர்ப்பாளர்களை அமைதிப்படுத்தி, ஞானிகளுடன் தர்க்கித்து எளியவர்களின் மனதை ஒளி வீசச் செய்தார். குழம்பிப் போனவர்களுக்குத் தெளிவையும், இருளிலிருந்தவர்களுக்கு வெளிச்சத்தையும், சமாதானமற்றவர்களுக்குச் சமாதானத்தையும், கொடுத்தார். மேட்டிமையானவர்களை தாழ்த்தி, நசுக்கப்பட்டவர்களை உயர்த்தி, பகையைத் தகர்த்து மனிதர்களை ஒப்புரவாக்கினார். அவர் சென்ற எவ்விடத்திலும், தமது தெளிவான வார்த்தைகள் மூலம் தாமே மேசியா என்பதை வெளிப்படுத்தினார்.

மதத் தலைவர்கள் மேசியா வரவேண்டும் என ஆவலுடன் அறிவித்தாலும், அவர்களும் அறியாமையினாலும், சுயவிருப்பங்களினாலும் மேசியாவாகிய இயேசுவைப் பற்றி அறியக்கூடாமல்

குருடர்களைப் போலிருந்தார்கள். அளவு கடந்த வல்லமையான வெளிப்பாடுகளை இயேசுவிடம் கண்ட மதத் தலைவர்கள் இயேசுவை பரியாசக்காரர் என்றும், துர்ருபதேசி என்றும் முத்திரை குத்தினர்.

பிசாசினால் ஆளப்பட்ட மதத் தலைவர்கள் இயேசுவை கொல்ல திட்டமிட்டனர். மதத் தலைவர்களும், சாத்தானும் இயேசுவை கொல்லுவதினால் உண்டாகப் போகும் விளைவுகளை நன்கு அறிந்திருக்கவில்லை. அவர்கள் அறிந்திருந்தார்களானால் மகிமையின் கர்த்தரை சிலுவையில் அறைந்திருக்க மாட்டார்கள்.

### இயேசுவின் வெற்றி பவனி

இயேசுவின் ஊழியமானது மூன்று ஆண்டுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இயேசுவே மேசியா என்பதற்கு நிரூபணமாக பல வெளிப்படையான அடையாளங்கள் காணப்பட்டபடியால் மதத் தலைவர்களின் கலக்கம் அதிகரித்தது. பாவ நிவர்த்தி செய்யும் நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. தேசத்தின் பாவ நிவர்த்தி செய்யும் பலியை பிரதான ஆசாரியன் தெரிந்தெடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. பலியாக ஓர் ஆட்டுக் குட்டியை தெரிந்தெடுக்க வேண்டிய குறிப்பிட்ட அந்த நாளில்தானே இயேசுவைப் போற்றி புகழும் திரள் கூட்ட மக்களோடு இயேசு எருசேலம் நகருக்குள் பிரவேசித்தார். பிரதான ஆசாரியன் பிராயச்சித்த பலிக்காக ஒரு பழுதற்ற ஆட்டுக் குட்டியை தெரிந்தெடுக்கும் நாளாக அது இருந்தது. இயேசு எருசலேமுக்கு பவனியாகச் சென்ற அதே நாளில் உலகப் பிரகாரமான பிராயச்சித்த பலி தெரிந்தெடுக்கும் நாளாக அமைந்தது, எதிர்பாராமல் நடந்தது அல்ல. தேவனால் முன்குறிக்கப்பட்டபடியே, அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட கிருபாதார பலியாக, உலகின் பாவங்களை சுமந்து தீர்க்கும் பலியாக தன் சொந்த குமாரனையே அறிமுகப்படுத்தும் நாளாக அந்த நாள் அமைந்தது.

### இயேசுவின் இறுதி பஸ்கா விருந்து

ஐந்து நாட்களுக்குப் பின்பு இயேசு தம்முடைய சீடருடன் பஸ்காவை ஆசரித்தார். இந்த பஸ்கா பண்டிகை ஆசரிப்பும் கூட,



இயேசுவே மேசியா என்பதை வெளிப்படுத்தும் விதமாக இருந்தது. இயேசு தாம் மரிக்கப்போவதையும், எதிரிகளின் கையில் தவறான குற்றச்சாட்டுகளுடன் காட்டிக் கொடுக்கப்படப் போவதையும், எழுதி இருக்கிறபடியே தேவனுடைய வாக்குத்தத்தம் தமது மரணத்தினால் நிறைவேறப் போகிறது என்பதையும் சீடர்களிடம் கூறினார். இயேசுவின் மரணம், நொறுக்கப்பட்ட அவரின் சரீரம், சிந்தப்பட்ட அவருடைய இரத்தம் இவைகள் எகிப்தின் அடிமைத் தனத்தலிருந்து விடுதலை அடைய மோசேயால் கைக்கொள்ளப்பட்ட பஸ்கா ஆட்டுக் குட்டிக்கு ஒப்பாகவே இருந்தது. இயேசுவின் இரத்தம் மரணத்திலிருந்து மக்களை மீட்ட பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்திற்கு ஒப்பனையாக அமைந்தது.

பஸ்கா ஆட்டுக்குட்டியின் அடையாளமான அப்பத்தையும் எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி இதை வாங்கிப் புசியுங்கள். இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாக இருக்கிறது. என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார். அந்தப்படியே போஜனம் பண்ணின பின்பு பாத்திரத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி இது உங்களுக்காச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தமாயிருக்கிறது இதை பானம் பண்ணுங்கள். என்னை நினைவு கூறும்படி இதை செய்யுங்கள் என்றார். (லூக் 22:19 - 20) அப்போஸ்தலனாகிய பவுல் தனது நிரூபத்தில் இச்சம்பவத்தை குறித்து கூறும்போது ''நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே'' (1 கொரி 5:7) என்று கூறினார்.

### இயேசு சிலுவையில் அறைப்படுதல்

பஸ்கா விருந்தை ஆசரித்த பின்பு இயேசு தம்முடைய சீஷர்களுடன் ஜெபிக்கும்படி கெத்சமனே என்ற தோட்டத்திற்குச் சென்றார். யூதமதத் தலைவர்கள் இயேசுவை கைது செய்வதற்காக இயேசுவின் இருப்பிடத்தைக் குறித்து யூதாஸ் மூலமாக அறிந்து கொண்டனர். யூதமத சட்டத்தின்படி இயேசுவைக் கொல்ல, பொது மக்கள் நிமித்தம் பயந்தனர். ஆகவே ரோம ஆளுநர்கள் மூலமாக ஆட்சியாளர்களுக்கு

விரோதமாக கலகம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டை சுமத்தி அவரை கைது செய்ய ஏற்பாடு செய்தனர்.

சிலுவையில் அறைதல் என்பது தாங்கமுடியாத வேதனையோடு மரிப்பதாகும். கைகளும், கால்களும் ஆணிகளால் அடிக்கப்பட்டு இரத்தம் முழுவதும் வடியும் பொழுது மூச்சுவிட முடியாமல் திணறல் ஏற்படும். மிக வேதனையோடு மணிக்கணக்காக சுவாசிக்கும் போது நுரையீரல் பெலவீனப்பட்டு வேதனை பெருகும். சிலுவை மரணத்தின் பாடுகளை விவரிப்பதற்கு வார்த்தைகள் இல்லை. மிகக் கொடிய வேதனையுடன் மரிப்பதுதான் சிலுவை மரணம். இப்படிப்பட்ட மிகக் கொடுமையான சிலுவை மரணத்தை இயேசு சகித்தார். இயேசு தேவனாகவும், அதே வேளையில் பூரண மனிதத்தன்மை உடையவரா கவும் இருந்தபடியால் தான் கெத்சமனே தோட்டத்தில் முகம் குப்புற விழுந்து சிலுவை மரணத்தை எண்ணி வேர்வை இரத்தம் கலந்து வெளியேறும் அளவுக்கு வியாகுலத்தோடு ‘‘பிதாவே இப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கட்டும், ஆயினும் என் சித்தப்படி அல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்றார்’’. (லூக் 22 : 42)

இயேசு பூரண பரிசுத்தமுள்ளவராக, பாவமற்றவராகவும், எப் பொழுதும் அன்போடு செயல்பட்டவராகவும் இருந்தும், ஓர் கொடூர மான குற்றவாளியைப் போல், நீதிமான் அநீதியுள்ள மக்களுக்காக, பரிசுத்தர் பாவிகளுக்காக, குற்றமற்றவர் குற்றவாளிகளுக்காக இயேசு பலியாக மரித்தார். ‘‘அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மை வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷ ரூபமாய் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவை யின் மரண பரியந்தம் கீழ்ப் படிந்தவராகி தம்மை தாமே தாழ்த்தினார்’’. (பிலி 2 : 6-8) என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறினார்.

பாவ நிவாரண பலி செலுத்தப்படும் நாளில் பிற்பகல் மூன்று மணிக்கு எக்காளம் முழங்க பிரதான ஆசாரியன் தெரிந்து கொள்ளப் பட்ட ஆட்டுக் குட்டியை தேசத்தின் பாவ நிவிர்த்திக்காக பலியிடு



வான். அதே நாளில் அதே நேரத்தில் இயேசுவும் சிலுவையில் தம் ஜீவனை விட்டார். இவ்விதமாக இயேசுவின் மரணம் மனுக்குல பாவத்திற்காக செலுத்தப்பட்ட ஜீவபலி என்பது நிரூபணமாகிறது.

இயேசுவே வாக்குப் பண்ணப்பட்ட ஸ்திரீயின் வித்து, உடன் படிக்கையின் அடையாளம், பஸ்கா ஆட்டுக்குட்டி, பிராயச்சித்தபலி, பாவ நிவாரண ஆடு. யோவான் அறிவித்தபடி உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் எக்காலத்திலும், எல்லா மக்களின் பாவங்களையும் நிவிர்த்தி செய்ய வல்லமை உடையது. இயேசு சிலுவையில் வேதனையோடு தொங்கிய போதும் ‘‘பிதாவே இவர்களை மன்னியும்...’’ என்றும், ‘‘முடிந்தது...’’ என்றும் முழங்கினார் (லூக்கா 23:34, யோவான் 19:30).

இப்பொழுது நீதி நிறைவேற்றப்பட்டது. ஆதாமினால் ஏற்பட்ட கடன் அடைக்கப்பட்டது. அப்போஸ்தலனாகிய பவுல் ‘‘இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்தில் பிரவேசித்தது போலவும் இதுவுமாயிற்று. அன்றியும் ஒரே மனுஷனு டைய கீழ்ப்படியாமையினாலே அனேகர் பாவிகளாக்கப்பட்டது போல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படு வார்கள். (ரோமர் 5:12,19) என்று கூறியுள்ளார். மேலும் ‘‘நமக்கு எதிரிடையாகவும், கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து சிலுவையின் மேல் ஆணியடித்து அவைகளின் மேல் சிலுவையில் வெற்றி சிறந்தார் (கொலோ 2:14) என்றும் கூறினார். ஆனால் அவர் சிலுவை மரணத்திற்குப் பின் நடைபெற்ற சம்பவமே மிக விலையேறப் பெற்ற அதிமுக்கியமான செய்தியாகும். இயேசுவின் மரணம் முடிவு அல்ல. பாவமற்ற தேவகுமாரனை மரணம் சிறைப்படுத்த முடியாது. அவர் உயிர்த்தெழுவார்.

d

அத்தியாயம் – 8

# உயிர்த்தெழுதலைப் பற்றிய மறை பொருள்

‘‘அவர் இங்கே இல்லை, தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்’’
(மத். 28 : 6)

''அவர் இங்கே இல்லை, தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்''
(மத். 28 : 6)

இயேசுவின் மரணம் கதையின் முடிவல்ல. அது தேவனுடைய மீட்பின் திட்டத்தில் ஓர் படி. ஆனால் அது சாத்தானின் ஆளுகையின் ''முடிவின் துவக்கம்.'' அது விசுவாசிக்கிறவர்களுக்காக திறக்கப்பட்ட நித்திய ஜீவனின் துவக்கமுமாம். இயேசுவின் மரணத்திற்கும், அவரின் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட மூன்று நாட்களில் நடைபெற்ற சம்பவங்கள் மேலும் நற்செய்தியைப் பற்றிய மறை பொருளை வெளிப்படுத்துகிறது. இயேசு கிறிஸ்துவே நமது நித்திய பிரதான ஆசாரியர், உயிர்த் தெழுந்த ஆண்டவர், வெற்றி பெற்ற மீட்பர் என்பதை நிறைவேற்றி காண்பித்தார்.

### நம்முடைய நித்திய பிரதான ஆசாரியர்

இயேசு சிலுவையில் மரித்த போது ''முடிந்தது'' (யோவான் 19:30) என்று கூறினார். இது ஆதாமோடு தேவன் செய்து கொண்ட உடன்படிக்கையை காண்பிக்கிறது. ஆதாம், ஆபிரகாம், மோசே மற்றும் தீர்க்கதரிசிகள் மூலமாக உடன்படிக்கையின் மாற்றாக அறிவிக் கப்பட்ட நபருக்குத் தேவையான எல்லா தகுதிகளையும் நிறை வேற்றினார். மனிதனுடைய மீட்பிற்கான விலைக்கிரயமாக தனது சொந்த இரத்தத்தைச் செலுத்தினார்.

யூதமத பிரதான ஆசாரியன் ஆண்டிற்கு ஒருமுறை மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து பழுதற்ற குற்றமற்ற ஆட்டின் இரத்தத்தை கிருபாசனம் என்னும் பணி முட்டின் மேல் வைப்பான். இது சகல மக்களுக்காக செலுத்தப்படும் பாவநிவாரண பலி. இயேசுவும் மரித்த பின் நமது பிரதான ஆசாரியராக தம்முடைய மகாபரிசுத்த ஸ்தலமாகிய பரலோகத்தில் படைத்தார். பாவ நிவாரண இரத்தம் பூமிக்குரிய கூடாரத்தில் செலுத்தப்படுவது போலவே. இயேசுவும் பரலோகத்தில் தம் இரத்தத்தைப் படைத்தார்.



''கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டி சம்பந்தமான கூடாரத்தின் வழியாயல்ல, பெரிதும் உத்தமமு மான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத் தத்தினாலும், ஒரே தரம் மகாபரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டு பண்ணினார். அதெப்படியெனில், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும் தீட்டுப்பட்டவர்கள் மேல் தெளிக்கப்பட்டு கடாரியின் சாம்பலும் சரீரசுத்தியுண்டாகும்படி பரிசுத்தப்படுத்துமானால், நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு உங்கள் மனசாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்'' (எபி. 9:11-14).

### ஜெயம் பெற்ற நமது மீட்பர்

சிலுவை மீது ''பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்'' (லூக் 23:46) என்று அறிக்கையிட்டார். இந்த அறிக்கை தேவனுடைய சித்தத்திற்கும், நியாயத் தீர்ப்பிற்கும், அவரை நம்பி, தன்னை அர்ப்பணிப்பதைக் காட்டுகிறது. ''என் ஜீவனை ஒரு வனும் என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ள மாட்டான், நானே அதை கொடுக்கிறேன்.'' (யோவான் 10:18) தேவனுடைய நியாயத் தீர்ப்பு பாவத்தின் சம்பளம் மரணம் என்பது ஆகும். இயேசு தாமாக மரணத்தை ஏற்றுக் கொண்டார். பாவம் செய்து தீர்ப்பின்படியான மரணம் அல்ல முழு மனுக்குலத்திற்காகவும் மரணத்தை ஏற்றுக் கொண்டார். மறு உடன்படிக்கையின் அதிகாரப்பூர்வமான பலி இவரே. இயேசு இரண்டு விதமான மரணத்தையும் அனுபவித்தார். சிலுவையில் சரீர மரணத்தை அடைந்தது மட்டுமல்ல, ஆவிக்குரிய மரணமாகிய பிதாவின் பிரிவையும் அடைந்தார். பிதாவின் பிரசன்னத்தை இழந்த போது சரீர வேதனையோடு கூட ஆவியிலும் வேதனை அடைந்து, ''என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்'' என்றார் (மத் 27: 46, 47)

இயேசுவின் உயிரற்ற சடலம் சிலுவையிலிருந்து இறக்கி கல்லறையில் வைக்கப்பட்ட போது அவருடைய பாவமற்ற ஆத்துமா சாத்தானின் மரண பாளையத்திற்குள் தைரியத்துடனும், நம்பிக்கையுடனும் பிரவேசித்தது. இயேசு சாத்தானின் கரத்திலிருந்து மரணம், பாதாளம் ஆகியவைகளின் திறவுகோலையும், மனிதன் மேலும், சிருஷ்டிப்பின் மேலும் அவனுக்கிருந்த வல்லமையை உரிந்து கொண்டார். துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார். (கொலோ 2:15) என்று பவுல் கூறுகிறார். ஆதாமுக்கும், ஏவாளுக்கும் அளிக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார். ஸ்திரீயின் வித்தாகிய இயேசுவின் குதிங்காலை சாத்தான் நசுக்கினான். அவர் சாத்தானாகிய சர்ப்பத்தின் தலையை நசுக்கினார். (ஆதி 3:15)

மரித்தவர்கள் அனைவரும் மரணச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தனர். விசுவாசத்துடன் மரித்தவர்கள் மரணச்சிறையின் மற்றொரு பகுதியான ஆபிரகாமின் மடிக்குச் சென்றனர். விசுவாசிகள் அவிசுவாசிகளைப்போல் வேதனை அனுபவிக்காமல் சிறையில் அடைப்பட்டவர்களாக இருப்பார்கள். (அத்தியாயம் 4ல் உள்ள ஐசுவரியவான் லாசரு பற்றி வாசிக்கவும்). இயேசு பாதாளத்திற்கு கீழிறங்கிச் சென்ற போது சாத்தானின் அதிகாரத்தை உரிந்து கொண்டது மட்டுமல்ல. விசுவாசி களை விடுதலை செய்தார். விடுதலை செய்யப்பட்ட விசுவாசிகளை தேவ சமூகமாகிய பரதீசுக்கு அழைத்துச் சென்றார். இயேசு தன்னுடன் மரித்த கள்வனைப் பார்த்து ‘‘இன்றைக்கு நீ என்னுடனேகூட மெய்யாகவே பரதீசியிலிருப்பாய்’’ என்றார். (லூக் 23:43).

## நம்முடைய உயிர்த்தெழுந்த ஆண்டவர்

விடுதலைக்குத் தேவையான அனைத்து நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டு, சாத்தானுக்கும் மரணத்திற்கும் இறுதி அடி கொடுக்கப்பட வேண்டிய நேரம். இயேசு பாவமற்ற தேவகுமாரன் ஆனபடியால் சாத்தான் மரணத்தில் அவரை கட்டிவைக்க முடியவில்லை. தேவனுடைய விடுதலைக்காக அனைத்தையும் அர்ப்பணிப்பது. ‘‘தேவன் அவருடைய மரண உபாதைகளின் கட்டை



அவிழ்த்து, அவரை எழுப்பினார், அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது. (அப் 2:24)

‘‘தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்கள் இடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்திரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும், தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக் கண்களைக் கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொள்கிறேன் (எபே 1:18-22) என்று பவுல் கூறுகிறார்.

## ஞாயிறு ஒளிர்கிறது

பெரிய வெள்ளி என்றழைக்கப்படும் நாளில் இயேசு சிலுவையில் மரித்தபின் அவரது சடலம் அரிமத்திய ஊரானாகிய யோசேப்பின் கல்லறையில் வைக்கப்பட்டது. இயேசு தான் உயிரோடிருந்த போதே வெளியரங்கமாய் மரித்து மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்திருப்பேன் என்று கூறினார். அவர் மேசியா என்பதற்கு அற்புதமான உயிர்த்தெழுதலே இறுதியான, உறுதியான அடையாளமாகும். மதத்தலைவர்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை வைக்காவிட்டாலும் அவருடைய சரீரம் களவாடப்பட்டு, உயிர்த்தெழுந்தார் என வதந்தி உண்டாகக் கூடாது என்பதற்காக கல்லறை வாசலை மிகப் பெரிய பாறையினால் மூடி அதைக் காவல் பண்ண போர்ச் சேவர்களுக்குக் கட்டளையிட்டு கல்லறையை முத்திரையிட்டனர்.

ஆனால் தள்ளாடும் மனிதனின் காவல் முயற்சி சாத்தான், மரணம் ஆகியவை கல்லறையில் இயேசுவை அடைத்து வைக்க முடியவில்லை. இயேசுவின் சரீரமும் ஆத்துமாவும் மீண்டும் இணைக்கப்பட்டது. எப்படி கம்பளிப் புழு அழகிய பட்டாம்பூச்சியாக மாறுகிறதோ அதைப் போலவே மரண சரீரம் நித்தியத்திற்குரிய மறுரூபமாக்கப்பட்ட சரீரமாக மாறியது. இயேசு மரணத்திலிருந்து

ஆத்துமாவோடும், சரீரத்தோடும் இணைந்தே உயிரோடெழும்பினார். ஒரு தேவதூதன் கல்லறையின் வாசலிலிருந்து கல்லைப் புரட்டிப் போட்டான். காவலாளிகள் பயந்து நடுங்கி கீழே விழுந்தனர். திறக்கப் பட்ட கல்லறையே இயேசு உயிரோடிருக்கிறார் என்பதற்கு சாட்சியாக மாறிற்று. ஞாயிறு அதிகாலை கல்லறைக்கு சென்ற ஸ்திரீகள் அங்கே நடந்தைக் கண்டு பயப்பட்டு தலை கவிழ்ந்து தரையை நோக்கி நிற்கையில் ஒரு தூதன் அவர்களை நோக்கி ''உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை அவர் உயிர்த்தெழுந்தார்.'' மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக் கொடுக்கப்படவும் சிலுவையிலறையப்படவும் மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்பதாக, அவர் கலிலேயா விலிருந்த காலத்தில் உங்களுக்குச் சொன்னதை நினைவு கூறுங்கள் என்றார்கள்'' (லூக்க 24:5-7). இதைக் கேட்ட பெண்கள் ஓடிப்போய் தாங்கள் கண்டதையும், கேட்டதையும் சீடர்களுக்கு அறிவித்தார்கள்.

இயேசு உயிர்த்தெழுந்தபின் தாம் உயிரோடிருக்கிறவராகத் தம்மை சீடர்களுக்குக் காண்பித்தார். தரிசனமாகவோ, சொப்பன மாகவோ, கனவாகவோ, பிரமையாகவோ, கற்பனையாகவோ அல்ல. சரீரமாக அவர்கள் நடுவில் இருந்தார். வித்தியாசமான சரீரமாக இருந்தாலும் உண்மையான சரீரம். இயேசு உயிரோடெழுந்த பின் ஸ்திரீகளுக்கும், சீடர்களுக்கும் மட்டுமல்ல 500க்கும் அதிகமானோ ருக்கு அவர் தரிசனமானார் (*I* கொரி 15:6-8)

உயிர்த்தெழுதலின் சத்தியம் ஸ்தாபிக்கப்பட்ட சரித்திர உண்மை. இயேசு ஜீவனோடிருக்கிறார். 2000 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற இச்சம்பவத்தால் நமக்கு என்ன பயன் என்ற உங்கள் கேள்விக்குப் பதில் அடுத்த அத்தியாயத்தில் உள்ளது.

d

**அத்தியாயம் – 9**

# மறுபிறப்பைப் பற்றிய மறை பொருள்

‘‘ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்’’ (யோவான் 3:3)

‘‘ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத் தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்’’ (யோவான் 3:3)

வேதாகமத்தின் செய்திகளில் மிக முக்கியமான செய்தி ‘‘உயிர்த் தெழுதலாகும்’’. உயிர்த்தெழுதல் நித்தியமான, ஒரு போதும் முறிக்க முடியாத புதிய உடன்படிக்கையை ஸ்தாபித்தது (எபி 8:8; 9:15, 10:39) கிறிஸ்தவ விசுவாசம் உயிர்த்தெழுதல் என்ற மைய சத்தியத்தை ஆதாரமாகக் கொண்டது. கிறிஸ்து எழுந்திருக்கவில்லை என்றால் எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா (1 கொரி 15:14) என்று பவுல் கூறுகின்றார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கிறிஸ்து உயிர்த்தெழுந்த விசுவாசிப்பதினால் உண்டாகும் ஆசீர்வாதம் என்ன? நற்செய்தியை விசுவாசியாமற் போனால் உண்டாகும் தீமை என்ன? இப்படிப்பட்ட கேள்விகள் நமக்கு எழலாம். பாவம் மனிதனை தேவராஜ்யத்தில் பிரவேசிப்பதிலிருந்து தடை செய்கிறது.

மாம்சமும், இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்க மாட்டாது (1 கொரி 15:50) என்று வேதம் கூறுகிறது. நமது பாவ நிவாரணமாக பாவமற்ற இயேசு கிறிஸ்துவின் இரத்தம் இறுதி பலியாக செலுத்தப்பட்டது. அவரின் உயிர்த்தெழுதல் மரணத்தின் வல்ல மையை முறித்தது. தேவனுடைய கிருபையும், அன்பும் நீதியுள்ள மக்களை மட்டுமல்ல, இயேசு கிறிஸ்துவின்பாடுகளால், முழு மனுக் குலமும் சாத்தானின் ஆதிக்கச் சிறையிலிருந்து தேவராஜ்யத்திற்குள் அழைத்துச் செல்ல செயல்பட்டது.

கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து எழுந்த, நித்திரை அடைந்த வர்களில் முதற்பலனானவர். மனுஷனால் மரணம் உண்டானபடியால் மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதா முக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன் தன் வரிசையிலே உயிர்ப்



பிக்கப்படுவான். முதற்பலனானவர் கிறிஸ்து, பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். (1 கொரி 15:20-23).

நாம் பிறந்தது போல அவர் பிறந்தார். நாம் ஒரு நாளில் மரிக்கப் போவது போல அவர் மரித்தார். அவர் மரித்தோரிலிருந்து உயிர்த் தெழுதலின் சரீரத்தோடு புதிதாய்ப் பிறந்தார். நாம் விசுவாசித்தால் நாமும் ஒரு நாளில் உயிர்ப்பிக்கப்படுவோம். அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவை நமது ஆவிக்குரிய மறுபிறப் பிற்கு வழியாக மாறிற்று. இயேசு தன் ஜீவனை இழந்து இனி ஒரு போதும் மரிக்காமல் இருக்கும்படி மரணத்தை வென்று உயிர்த் தெழுந்தார். ‘‘நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்’’ (யோவான் 14:19) என்று இயேசு கூறினார்.

## இயேசுவே வழி

இயேசு ஒருவரே பாவமற்றவராக வாழ்ந்து, பாவ நிவாரண பலியாக சிலுவையில் மரித்து உயிரோடெழுந்தபடியால், அவர் ஒருவரே பாவமன்னிப்பிற்கும், இரட்சிப்பிற்கும் பரிகாரியான ஒரே வழியானார். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும் பழக்கு வானத்தின் கீழெங்கும்,மனுஷர்களுக் குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளை யிடப்படவில்லை (அப் 4:12) என்று வேதம் கூறுகிறது. முகமது நபியோ, புத்தரோ, கன்பியூஸியஸோ அல்லது வேறு எந்த கடவுள் எனப்படுபவர்களோ பாவமற்ற வாழ்க்கை வாழ்ந்து மரித்து உயிரோ டெழுந்திருக்கவில்லை. இயேசு ஒருவர் மட்டுமே பாவமற்று வாழ்ந்து மரித்து உயிரோடெழுந்த மேசியா.

## இயேசுவே மறுபிறப்பின் வழி

இயேசு கிறிஸ்து விட்டுச் சென்ற அடிச்சுவடுகளே நித்திய ஜீவனுக்குச் செல்லும் வழி. நீக்கதேமு என்ற மனிதனோடு ‘‘மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது’’ என்று கூறினார். நீக்கதேமு ஆண்டவரே நான் எப்படி

தாயின் கர்ப்பத்தில் சென்று மறுபடியும் பிறக்க முடியும் என்று கேட்டான். அதற்கு இயேசு ''ஒருவன் ஜலத்தினாலும் (சரீர பிறப்பு), ஆவியினாலும் (ஆவிக்குரிய பிறப்பு) பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று கூறினார். நீங்களும் மறுபடியும் பிறந்தே ஆக வேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும், மாசற்றதும், வாடாததுமாகிய சுதந்திரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின் படியே நம்மை மறுபடியும் ஜெபிப்பித்தார், (1 பேது 1:3) என்று கூறப் பட்டுள்ளது.

மறுபிறப்பு என்பது இயேசு கிறிஸ்துவால் நமக்கு அருளப்பட்ட புதிய ஜீவவழி (எபி 10:20). மறுபிறப்பு ஒன்றே நாம் மரித்தோரி லிருந்து உயிரோடெழும்பவும், நித்திய ஜீவனை அடையும் வழி. குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் நித்திய ஜீவனை அடைவதும், நான் அவனை கடைசி நாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவரது சித்தமாயிருக்கிறது (யோவான் 6:40) என்று இயேசு கூறினார். அதுவே நமது பெயரை பரலோகத்தில் ஜீவபுத்தகத்தில் பதிவு செய்வதாகும். ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்ட வனாகக் காணப்படாதவன். எவனோ அவன் அக்கினிக்கடலில் தள்ளப் பட்டான் (வெளி 20:15) என வேதம் கூறுகிறது.

இயேசு கிறிஸ்துவாகிய மேசியாவை விசுவாசிப்பதே நித்திய நியாகத் தீர்ப்பிலிருந்து நம்மை தப்புவிக்கும். கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே (கலா 2:16) மறுபிறப்பு, மறு ரூபப்படுத்தப்பட்ட சரீரத்தை நாம் பெற்றுக் கொள்ள வழி செய் கிறது. இம்மறைபொருளை ஓர் விதைக்கு பவுல் ஒப்பிடுகிறார் (1 கொரி 15:35-50). சிறிய விதை நிலத்தில் விதைக்கப்பட்டு அழிந்து மிகப் பெரிய மதிப்புள்ள மரம் வெளிப்படுவது போல என்று விளக்குகிறார். ஒரு நாள் மரணம் நம்மை சந்திக்கும் போது நாம் மனம்



திரும்பி மறுபடிமான நித்தியத்திற்குரிய சரீரத்தைப் பெறுவோம். அனைவரும் ஒரு நாளில் தேவனுக்கு முன்பாக நிற்போம். அன்றியும் ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத் தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப் பட்டிருக்கிறது என்று வேதம் கூறுகிறது. (எபி 9:27) தேவனுடைய அன்பின் அழைப்பை ஏற்க மறுப்பவர்கள் நியாயத் தீர்ப்புக்கு உட்படுத் தப்படுவார்கள். மனுஷருடைய ஒவ்வொரு கிரியையும் நியாயத் தீர்ப்பிலே கொண்டு வந்து நிறுத்தப்படும். தேவனுடைய நீதியை நிறைவேற்றாத அனைவரும், சாத்தானுடனும், அவனுடைய வீழ்ந்து போன தூதர்களுடனும், நித்திய ஆக்கினை அடைவார்கள். ஆனால் தேவ நீதியை நிறைவேற்றிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து இரட்சகரும் ஆண்டவருமாக ஏற்றுக் கொண்டால் நீங்களும் நியாயமாக தீர்ப்பிற்குத் தப்பித்துக் கொள்ளலாம்.

**இயேசு வேண்டுமா! உங்களுடைய தீர்மானம்**

தீர்மானம் செய்ய வேண்டிய நேரத்திற்கு இப்போது நீங்கள் வந்து விட்டீர்கள். மீட்பின் செய்தியை வாசித்தீர்கள். இச்செய்தி உங்களுக்குரியது. இனி அடி எடுத்து வைக்க வேண்டியது நீங்கள் தான். கீழே இதுவரை நாம் அறிந்து கொண்ட சத்தியங்களின் தொகுப்பைக் காண்போம்.

தேவன் மனிதனை தனது சாயலாக, தன்னோடு ஐக்கியத்தில் இருக்க வேண்டுமென்றே உண்டாக்கினார். மனிதன் உடன்படிக் கையை மீறினபடியால் பாவம் அவன் வாழ்க்கையை ஆண்டு கொண்டது. ஆதாமின் மீறுதலுக்குப் பின் பிறந்த அனைவரும் ஆவிக்குரிய மரணத்தை தழுவியே பிறந்தனர் (தேவனற்ற வாழ்வு) வேதம் சொல்லுகிறது ''உங்கள் பாவங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் இடையே பிரிவினையை உண்டாக்குகிறது'' (ஏசா 59:2). இந்நிலைமை மாறாமல் நீங்கள் மரித்துப் போவீர்களானால் நித்திய மரணமாகிய நரகத்தில் தள்ளப்படுவீர்கள். அங்கே சாத்தானும் அவனை பின்பற்றுபவர்களும் காணப்படுவர்.

நற்செய்தி அல்லது சுவிசேஷம் நமக்குக் கூறுவது எல்லாம் நம்பிக்கையூட்டுவதாகவே வ உள்ளது. இழந்து போன தேவனோடுள்ள உறவை புதுப்பிக்கவும், நித்திய ஜீவனை அடையவும் இவ்வுலக வாழ்க்கையை நல்நோக்கத்தோடு பயனுள்ள வாழ்க்கையாக வாழவும் நமக்கு ஒரு வழி திறக்கப்பட்டுள்ளது. நீங்கள் மரிக்கும் போது நரக ஆக்கினைக்குத் தப்புவிக்கப்படவும், பரலோகத்திற்குள் பிரவேசிக் கவும் தேவன் நமக்கு ஓர் வழியை இயேசு கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் ஏற்படுத்தியுள்ளார். இயேசு இவ்வுல கிற்கு வந்த ஒரே நோக்கம்'' இழந்து போனதைத் தேடவும், இரட்சிக் கவும்'' (லூக் 19:10). நற்கிரியைகளினாலோ, வேறு எந்த வழியிலும் மனிதன் பரலோகம் செல்ல முடியாது.

- இயேசுவே இரட்சிப்பின் வழி
- இயேசுவே உங்களுக்காக மரித்த உடன்படிக்கையின் கிருபாதார பலி

''நான் நித்திய ஜீவனை அடைவது எப்படி?'' என்பது உங்கள் கேள்வியாக இருக்குமானால், நீங்கள் செய்ய வேண்டியது எளிய மூன்று காரியங்கள் மட்டுமே.

**1. அறிக்கையிடுங்கள் :-** பாவம் செய்து தன்னலமாக வாழ்ந்து, சுய சிந்தனையில் வீழ்ந்து, சுய இன்பங்களுக்காகவே வாழ்ந்து பாவ வாழ்வினால் தேவனோடுள்ள ஐக்கியத்தை இழந்து போனேன். நான் பாவ வாழ்விலிருந்து மனந்திரும்பி இயேசுவை என் ஆண்டவராக ஏற்றுக் கொள்ளுகிறேன். (ரோமர் 3:23) எனக் கூறி தேவனிடம் வாருங்கள்.

**2. விசுவாசியுங்கள் :-** இயேசு கிறிஸ்துவே தேவனிடம் நாம் சேர்வதற்கு வழி (யோவான் 14:6, அப் 4:12, 10:43 ரோமர் 10:9-10, தீமோ 2:4-6). இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன் என்பது மனதில் எடுக்கும் தீர்மானம் மட்டுமல்ல. அத்தீர்மானமானது இருதயத்தில் வேர் ஊன்றி, அவ்விசுவாசம் புதிய சிந்தை, புதிய செயல், புதிய வாஞ்சை,



நோக்கம் ஆகியவற்றை செயல்களில் வெளிப்படுத்தும். நித்திய வாழ்வின் உறைவிடமான இயேசுவோடு இணைந்திருப்பீர்கள். புதிய கண்களால் காண்பீர்கள். புதிய செவிகளால் கேட்பீர்கள். உங்கள் வாழ்வு விலை மதிப்பற்றதாகிவிடும்.

**3. அழையுங்கள் :-** ரோமர் 10:13 கூறுகிறது. கர்த்தருடைய (இயேசு கிறிஸ்துவின்) நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். இன்றே இரட்சண்ய நாள். இன்றே அனுக்கிரஹ காலம். நாளை நம்முடையதல்ல. தேவனுடைய அழைப்பிற்கு இன்றே கீழ்ப்படியுங்கள்.

கீழ்க்கண்ட ஜெபத்தை ஏறெடுத்து இயேசுவை நீங்கள் அழைக் கலாம்.

''அன்புள்ள இயேசுவே நான் ஒரு பாவி என்பதையும் நீரே தேவனிடம் சேர ஒரே வழி என்பதையும் விசுவாசிக்கிறேன். உம்மை என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுகிறேன். இந்த நாள் முதல் விசுவாசத்தோடு என் வாழ்க்கையை உம் கையில் ஒப்படைக்கின்றேன். என்னை ஏற்றுக் கொள்ளும். ஆமென்.

இச்சிறிய ஜெபத்தை என்னுடன் சேர்ந்து ஜெபித்திருப்பீர்கள் என்றால் ஏதோ மிக அற்புதமான, அதிசயமான ஒன்று இப்போது நடைபெற்றுள்ளது. கவனித்து கேட்பார் ஒருவரும் உங்கள் அருகில் இல்லாமல் போனாலும் தேவன் உங்கள் ஜெபத்தை கேட்டிருக்கிறார். உங்கள் நிமித்தம் பரலோகில் தூதர்களுக்கு முன் இச்சமயம் சந்தோஷ மும், மகிழ்ச்சியும் உண்டாகியிருக்கிறது. நீங்கள் என்னோடு ஜெபிக்கும் படி எடுத்த இந்த தீர்மானமே உங்கள் வாழ்வின் மிக முக்கியமான தீர்மானமாகும். இப்போது நீங்கள் ''புதிதாய் (மறுபடியும்) பிறந்திருக் கிறீர்கள்''. ''ஒருவன் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டால் அவன் புது சிருஷ்டியாயிருக்கிறான், பழயவைகள் எல்லாம் ஒழிந்து போயின எல்லாம் புதிதாகின'' (2 கொரி 5:17) பாவத்திலிருந்தும், சாத்தானின் கட்டுகளிலிருந்தும், தேவனுடைய கிருபையினாலும், வல்லமை

யினாலும், பாவங்கள் மன்னிக்கப்பட்டவர்களாக இப்போது விடுதலை பெற்றிருக்கிறீர்கள். உங்கள் வாழ்க்கையின் முடிவு பரலோகத்தை இலக்காக வைத்து புதிய அர்த்தமுள்ள வாழ்வாக அமைந்துள்ளது. உங்களின் இந்த தீர்மானத்தினால் உண்டான வாழ்க்கையின் மாற்றத்தை புரிந்து கொள்ள, இப்புதிய பாதையில் செல்ல, இயேசு கிறிஸ்துவில் நீங்கள் கண்ட புதிய விசுவாசத்தில் வளர அடுத்த அதிகாரத்தை வாசியுங்கள்.

d

## அத்தியாயம் – 10

# ஆவிக்குரிய வளர்ச்சி பற்றிய மறை பொருள்

நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல,
திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல்
வாஞ்சை யாயிருங்கள். (1 பேதுரு 2:3)

நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சை யாயிருங்கள். (1 பேதுரு 2:3)

இப்போது இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட நீங்கள் ஆரோக்கியமான நல்லதொரு விசுவாசியாக வளர கீழே குறிப்பிட் டுள்ளவைகளைப் புரிந்து செயல்பட வேண்டியது அவசியம்.

ஓர் குழந்தை பிறந்த பின் அது ஆரோக்கியமாக வளருவதற்கு பல தேவைகள் உள்ளது போலவே விசுவாசத்தில் புதிதாய் பிறந்த குழந்தையாகிய நீங்கள் வளருவதற்கும், பெலனடைவதற்கும் சில தேவைகள் உண்டு. அவைகளை இவ்வத்தியாயத்தில் காணலாம்.

**உங்கள் தீர்மானத்தின் தரிசனம் (பார்வை)**

உங்கள் தீர்மானமானது ஏதோ ஒரு இன்சூரன்ஸ் பாலிசியை வாங்கி வைத்து விடுவது போன்றதல்ல. இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொள்வது என்பது மனதை மறுரூபப்படுத்தும், மறுவாழ்வை அளிக்கும். உங்கள் தீர்மானம் உங்களுடைய விருப்பம், திட்டம், உறவு, வாழ்க்கை முறை யாவற்றையும் தலைகீழாக மாற்றும் தாக்கம் கொண்டது. அது உங்கள் வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளையும் பாதிக்கும் செயல். உங்கள் பரம பிதா உங்களுக்காகப் பரலோக சுதந்திரத்தை வைத்திருக்கிறார். தேவனுடைய பிள்ளையாக மாறிய உங்கள் வாழ்க்கை அற்புதமான விலையேறப் பெற்றதாக மாறி விட்டது. உங்கள் பாவம் மன்னிக்கப்பட்டது. உங்கள் வெட்கம் கடந்து போய் விட்டது. நீங்கள் ஓர் புதிய சிருஷ்டி ‘‘இயேசுவே இம்மாறுதலைத் தந்தற்காக நன்றி என்று சொல்லுங்கள்’’. நீங்கள் பெற்றுக் கொண்ட இந்த அனுபவம், உங்களை இருளிலிருந்து ஒளியினையுண்டாக்கும், நித்திய மரணத்தி லிருந்து நித்திய ஜீவனுக்கும் கொண்டு வந்து விட்டது.

**வளர்ச்சியின் படிகள்**

1. நற்செய்தியாகிய சுவிசேஷத்தைப் பற்றிய அறிவில் பெலப்பட வேண்டும். இப்புத்தகம் புது வாழ்வை துவங்க தேவையானவற்றை



விளக்கியுள்ளது என்றாலும், உங்களுக்கு கேள்விகள் எழலாம். இந் நூலை உங்களுக்கு வழங்கியவர்கள் தேவனோடுள்ள உங்கள் உறவை பெலப்படுத்தவும், உங்கள் சந்தேகங்களை நீக்கவும் உதவி செய் வார்கள். அவர்களுடன் ஐக்கியம் கொள்ளுங்கள்.

2. நம்முடைய மாம்ச சரீர வளர்ச்சிக்கு எப்படி உணவு, தண்ணீர், காற்று அவசியமோ அதைப் போலவே வேத வசனம், ஜெபம் ஆராதனை நம் ஆன்மீக வளர்ச்சிக்கு அவசியமாகும். ஒவ்வொரு நாளும் நாம் இதில் வளர வேண்டும். வேதாகமம் நமது ஆவிக்குரிய ஆகாரமாகும். மனிதன் அப்பத்தினால் மாத்திரமல்ல. தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் (மத் 4:4) என்று இயேசு சொன்னார். அனுதினமும் வேத வசனத்தை வாசித்து, தியானித்து உட்கொள்ள வேண்டியது அவசியம். வேதத்தில் புதிய ஏற்பாட்டில் உள்ள நான்காவது புத்தகமான யோவான் எழுதின சுவிசேஷத்தை முதலில் வாசிக்க உங்களை தூண்டுகிறேன். வேத புத்தகம் நமது ஆவிக்குரிய ஆகாரமாக உள்ளது. ஜெபமும், ஆராதனை யும் ஆவிக்குரிய தண்ணீராகும். இயேசு யோவான் 4ல் சமாரிய ஸ்திரீயுடன் பேசுகையில் ‘‘ஜீவத் தண்ணீரை’’ குறித்துப் பேசினார். நீரின்றி உயிர் வாழ்வது எவ்வளவு கடினமோ அதுபோலவே ஜெபமும், ஆராதனையும் இல்லாமல் வாழ்வது ஆரோக்கியமானதாகாது. இவை இரண்டும் இல்லை என்றால் நம் ஆவிக்குரிய வாழ்க்கை வாடி மடிந்து போய் விடும். ஜெபம் என்பது தேவனோடு நமது காரியங்களைப் பகிர்ந்து கொள்வது. ஆராதனை என்பது தேவனைப் புகழ்ந்து, நன்றி கூறுவது. அவருக்காகச் செயல்படுவது. நமது ஆராதனை புதுப்பித்த லையும், தேறுதலையும், இளைப்பாறுதலையும் நமக்கு அளிக்கும்.

3. மறுபடியும் பிறந்த குழந்தை தானாக வளர முடியாது. ஓர் கிறிஸ்தவனும் தனியாக வளரமுடியாது. ஆரோக்கியமான வளர்ச் சிக்கும் ஆவிக்குரிய பிரயாணத்திற்கும் ஓர் ஐக்கியம் தேவை. ஆகவே நீங்கள் வாழும் பகுதியில் வேதத்தை விசுவாசிக்கும், வேதத்தை போதிக்கும், தேவ ஆவியினால் நிரப்பப்பட்ட ஓர் சபையில் அங்கமாக உங்களை இணைத்துக் கொள்ளுங்கள்.

4. தேவ பிள்ளையாக மாறின உங்களுக்குத் தேவன் திறமைகளை, வரங்களை அளித்துள்ளார். அவைகளைக் கண்டுபிடித்து அவைகளின் மூலம் தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுங்கள். மற்றவர்களும் இயேசுவை அறிந்து கொள்ள செயல்படுங்கள்.

வேதவாசிப்பு, ஜெபம், ஆராதனை, திருச்சபை ஐக்கியம். இவைகளின் மூலம் நீங்கள் கற்றுக் கொண்ட சத்தியங்களை கைக் கொள்ளவும், மறுரூபப்படுத்தப்பட்ட வாழ்வில் முன்னேறவும் தூய ஆவியானவர் உங்களுக்கு துணைப்புரிவாராக.

''உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர். அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் நடத்தி வருவாரென்று விசுவாசிப்போம்'' (பிலி 1:6).

இயேசு கிறிஸ்து கூறியது போல ''தேவனுடைய இராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது'' (மாற் 4:11) வாழ்க்கையின் மறைபொருளின் பதில் வேதத்திலும், நமது இரட்சகர் இயேசு கிறிஸ்துவிலும் காணப்படுகிறது. நீங்கள் கிறிஸ்துவில் வளரவும், அவரது பிரசன்னத்தால் நிரம்பி, வல்லமையால் நிரப்பப்பட்டு, அவருக்குப் பயனுள்ள பாத்திரமாகப் பயன்படவும் நான் வாஞ்சிக்கிறேன்.

நான் உங்களுக்காக ஜெபிக்கட்டுமா? ''அன்புள்ள இயேசுவே இந்நூலை வாசித்த இவர்கள் உள்ளத்தில் உமது வசனமாகிய விதை ஊன்றப்பட்டு, வளர்ந்து, நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு கனியைத் தந்து இலையுதிராது இருக்கிற மரத்தைப் போல் செழிப்பார்களாக.'' (சங் 1)

''தேவனுடைய அளவற்ற ஆசீர்வாதம் உங்கள் விசுவாச வாழ்க்கையை நிரப்புவதாக'' ஆமென்.

d